# மின்னிதழ் பாதுகாவலன்

இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2020. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 144 | இதழ் : 07 | திகதி : 13.05.2020 | விலை : 30.00


## மே 14 செபம், உண்ணா நோன்பு, மற்றும் பிறரன்பின் நாள் மதநம்பிக்கையுடையோரே இணைந்து வாருங்கள் - திருத்தந்தை அழைப்பு



இன்றைய உலக நெருக்கடியைக் குறிப்பிட்டு, கோவிட்-19 நோய்க்குத் தடுப்பு மருந்தும், நோய் அகற்றும் மருந்தும் கண்டுபிடிக்கப்படுவதற்கு, உலக அளவில், ஒருங்கிணைந்த முயற்சிகள் இடம்பெறவேண்டும் என விண்ணப்பித்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.

மதநம்பிக்கையுடைய அனைவரும் இணைந்து, இம்மாதம் 14ம் திகதியன்று, செபம், உண்ணா நோன்பு, மற்றும், பிறரன்பு நடவடிக்கையின் நாளைக் கடைபிடிக்க, மனித உடன்பிறந்த நிலை என்ற அமைப்பின் உயர்மட்டக் குழு விடுத்துள்ள பரிந்துரையைத் தானும் ஏற்றுள்ளதாக அறிவித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அந்நாளின் முயற்சிகளை, இந்நோய் அகற்றலுக்கான இறைவேண்டலுக்குச் சமர்ப்பிக்க உள்ளதையும் சுட்டிக்காட்டினார்.

## யாழ் மறைமாவட்டத்தில் ஆலயங்கள் தனிப்பட்ட இறைவேண்டலுக்காகத் திறக்கப்பட்டிருக்கும்

யாழ். மறைமாவட்டத்தில் இதுவரை காலமும் பூட்டப்பட்டிருந்த ஆலயங்கள் தற்போது ஊரடங்கு இல்லாத வேளைகளில் இறைமக்களின் தனிப்பட்ட இறைவேண்டல்களுக்காகத் திறக்கப்பட்டிருக்கும் என யாழ்.ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அறிவித்துள்ளார்.

எனினும் மறு அறிவித்தல்வரை திருப்பலிகள் பொது வழிபாடுகள் எதுவும் நடைபெறமாட்டாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இக்காலத்தில் திருமுழுக்கு, பாவசங்கீர்த்தனம், திருமண வார்த்தைப்பாடு, திருமணம், அடக்கச்சடங்கு போன்ற நிகழ்வுகளுக்காக இறைமக்கள் பங்குத்தந்தையர்களோடு தொடர்பு கொண்டு, நாட்டில் நடைமுறையிலுள்ள சட்டதிட்டங்களுக்கு அமைவாக இவற்றைச் செய்யமுடியும் என்றும் ஆயர் அறிவித்துள்ளார்.

## முள்ளிவாய்க்கால் நினைவு நாளில் மன்றாடுவோம்

முள்ளிவாய்க்காலில் ஈழத்து இறுதி யுத்தத்தில் காவியமான அனைத்து இன்னுயிர்களையும் அஞ்சலித்து அவர்களது ஆன்மாக்கள் இறைவனில் நித்தியத்தில் இளைப்பாற செபித்து நிற்கின்றோம். இறுதிப் போரில் காணாமல் ஆக்கப்பட்டோர் வீடு சேர இறைவனிடம் மன்றாடுவோம். போரின் வடுக்களை இன்றும் வாழ்வில் சுமந்து வாழும் குடும்பங்கள் இறை அமைதியைக் கண்டுகொள்ள இறைவனிடம் தொடர்ந்து மன்றாடுவோம்.

## சுற்றுச்சூழல் வாரம் - மே 16 - 24 நாளைய சந்ததி வளமாக வாழ சுற்றுச்சூழலைப் பராமரிப்போம் திருத்தந்தை அறைகூவல்

"இறைவன் போற்றப்படுவாராக" (Laudato si) என்ற தலைப்பில் சுற்றுச்சூழலைப் பராமரிப்பதன் அவசியம் பற்றி 2015ம் ஆண்டு திருத்தந்தை வெளியிட்ட திருமடலின் ஐந்து ஆண்டுகள் நிறைவில் இம்மாதம் 16 முதல் 24 வரையிலான வாரத்தை சுற்றுச்சூழல் வாரமாக அனுசரிக்குமாறு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்.

இன்று உலகைத் தலைகீழாக மாற்றியுள்ள கொடிய தொற்றுநோயிலிருந்து இவ்வுலகைக் காத்து நம் எதிர்கால சந்ததியினருக்கு ஒரு வளமான, ஆரோக்கியமான உலகை விட்டுச்செல்ல மேற்படி திருமடலின் படிப்பினைகளை மீண்டும் உள்வாங்கி, அதற்கேற்ப செயற்திட்டங்கள் தீட்டி செயற்பட நாம் எல்லோரும் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொண்ட திருத்தந்தை அவர்கள், இந்நோக்கத்துக்காக இவ்வாரத்தைப் பயன்படுத்துமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

## புனித திருத்தந்தை 2ம் ஜான் பவுல் அவர்களின் 100வது பிறந்த நாள்



"புனித 2ம் யோவான் பவுலே! உமக்கு நன்றி" என்ற தலைப்பில் அவருடைய 100வது பிறந்த தினத்தை நன்றி உணர்வோடு நினைவுகூரவேண்டுமென போலந்து ஆயர் பேரவை கேட்டுள்ளது.

இம்மாதம் 18ம் திகதி இவருடைய 100வது பிறந்த நாளில் உலகத் திருஅவைக்கு இப்புனிதர் ஆற்றிய அளப்பரிய சேவையை மீட்டிப்பார்த்து அவருக்கும், இறைவனுக்கும் நன்றி கூற அனைத்து இறைமக்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## அகவை 72 இல் வாழ்த்தி மகிழ்கின்றோம்



ஒரு பெரும் முதிர்நதியின்
பாறைகள் மிதித்தெழும்
பாய்ச்சல் இது

கடை எல்லை வரை
கடவுளின் கதை சொல்லும்
காலக் குரலின் பிரவாகம்

சிலுவை அழுத்தும் சீடத்துவத்தில்
மந்தை வாசம் மணக்கும்
பயணத்தின் புதிய அடி

கோடி கோடி ஆண்டுகள்
உச்சி வானில் பறந்தாலும்
சோர்ந்து போவதே இல்லை
சூரியனின் சிறகுகள்

அன்பான எம் ஆயரே!
அன்னை மரி வழி இயேசுவிடம்
தொடரட்டும்
உங்கள் நதிப்பயணம்

இதயம் நிறைந்து வாழ்த்துகின்றோம்

பாதுகாவலன் வாசக நெஞ்சங்கள்

## மரியாவின் திருத்தலங்களுக்கு ஆன்மீக முறையில் பயணிக்க அழைப்பு

அன்னை மரியாவுக்கென அர்ப்பணிக்கப்பட்டுள்ள இந்த மே மாதத்தில், ஒவ்வோர் ஆண்டும் அன்னை மரியா திருத்தலங்களுக்கு விசுவாசிகள் திருப்பயணம் மேற்கொள்வது வழமையானது என சுட்டிக்காட்டிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இவ்வாண்டு கொரோனா தொற்று நோய் அச்சம் காரணமாக, மக்கள், வீட்டில் இருந்தவாறே, இத்திருத்தலங்களுக்கு, ஆன்மீக முறையில் பயணம் மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டார்.

## கோவிட்-19 கொள்ளைநோய்க் காலத்தில் பிறரன்புக்கு அழைப்பு

கோவிட்-19 கொள்ளைநோய்க் காலத்தில், தங்கள் வாழ்வில் கடவுளின் தலையீட்டைச் செபத்தில் கண்டுணருமாறும், நன்கொடைகள் வழங்கி வறியோர் மற்றும், தேவையில் உள்ளவர்களுக்கு உதவுமாறும், பங்களாதேஷ் கர்தினால் Patrick D'Rozario அவர்கள், அந்நாட்டுக் கத்தோலிக்கருக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

கடவுளில் நாம் வைத்திருக்கும் நம்பிக்கை பரிசோதிக்கப்படும் இக்கால கட்டத்தில், அவர்மீது நம் நம்பிக்கையை ஆழப்படுத்துவோம் என்று கூறியுள்ள, டாக்கா பேராயர், கர்தினால் D'Rozario அவர்கள், மே 14, வருகிற வியாழனன்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுடன் இணைந்து, செபம் மற்றும், நோன்பைக் கடைப்பிடிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

இவ்வாறு தன் மேய்ப்புப்பணி அறிக்கையில் கூறியுள்ள கர்தினால் D'Rozario அவர்கள், மே 14ம் தேதியன்று, இரக்கச் செயல்களையும் ஆற்றுமாறு, கத்தோலிக்கரை வலியுறுத்தியுள்ளார்.

கோவிட்-19 நெருக்கடிச் சூழலில், பங்களாதேஷ் கத்தோலிக்கர் கொண்டிருக்கும் ஆழ்ந்த கிறிஸ்தவ நம்பிக்கைக்கு, ஆண்டவரைப் போற்றிப் புகழ்வதாகத் தெரிவித்துள்ள அந்நாட்டு கர்தினால், கடவுளில் நம்பிக்கை வைப்பதன் வழியாக, நாம் ஒருநாள், நம்பிக்கைக்கு முன்வைக்கப்படும் சோதனையை வெற்றிகொள்வோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

மே 14ம் தேதி, டாக்கா உயர்மறைமாவட்டத்திலுள்ள அனைத்து அருட்பணியாளர்களும், விசுவாசிகளுடன் ஆன்மீக முறையில் ஒன்றித்திருந்து, சிறப்பான இறைவேண்டல்களை எழுப்புவார்கள் என்றும், கர்தினாலின் அறிக்கை கூறுகிறது.

இதற்கிடையே, பங்குத்தள அவைகள் மற்றும், வின்சென்ட் தெ பால் கழகத்திடமிருந்து, ஏறத்தாழ 811 குடும்பங்கள், உதவிகளைப் பெற்றுள்ளன. பங்களாதேஷ் கரித்தாஸ் அமைப்பும், 88,400 டாலர்கள் பெறுமான உதவிகளை, ஆயிரக்கணக்கான மக்களுக்கு வழங்கியுள்ளது.

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

# ஒரு திசைகாட்டி மரத்தின் விரல்கள்

## எம் ஆயர் : சில பதிவுகள்



சரித்திரத்தைப் படிப்பவனுக்கும் சரித்திரத்தைப் படைப்பவனுக்குமிடையில் பெரும் இடைவெளி இருக்கத்தானே செய்கிறது. இலைகளும் கிளைகளும் தானே சத்தம் செய்கின்றன. வேர்கள் மௌனமாகவே இருக்கின்றன. ஆழமான மனிதர்களை அடையாளப்படுத்துவதாய். இன்று யாரெல்லாம் புத்தகங்களை நோக்கித் தலைகுனிகிறார்களோ அவர்கள் நாளை உலகங்களின் உச்சிகளிலே உட்கார்ந்திருப்பார்கள். ஏதோ ஓர் மழைநாளில் தூவானம் பட்டுக் கூதல் விறைக்கும் யன்னலோரத்திலோ, நிலாக்காயும் என் வீட்டுத் திண்ணையிலோ, மௌனங்கள் சிதறிக்கிடக்கும் நூலக மேசையிலோ இந்த வார்த்தைகளை கண்கள் உறுஞ்சிக்குடிக்கும் தருணங்களிலெல்லாம் அந்த முகம் ஒரு மின்னல் வெட்டாய் வந்துபோகும். அது எம் யாழ்.மறைமாவட்ட ஆயர் அதிவண. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை என்ற ஆளுமை. "அன்னை மரி வழி இயேசுவிடம்" தன் மந்தைகளைப் பசுமையான புல்வெளிகள் நோக்கி அழைத்துச் செல்லும் எம் ஆயர், பாசத்தாய் தூய பற்றிமா அன்னையின் விழா நாளில் பிறந்தது மிகப் பொருத்தம்.

தினம் தினம் பெரும் மாற்றங்களோடு திசைகள் தோறும் பிரவாகம் எடுத்து, கரைகள் உடைத்துப் பாயும் மானிடத்தின், நகர்வின் சந்திகளில் ஒரு திசைகாட்டி மரமாக நின்றுகொண்டு, வரலாறு நடந்துபோக வேண்டிய பாதைகளைத் தீர்மானித்துக் கொடுக்கும் தீர்க்க தரிசனப் பார்வை எம் ஆயருக்கு ஆண்டவன் கொடுத்த பெரும் வரம்.

'நான்' என்பது எப்போதும் ஆணவம் அல்ல. அது ஒரு மனிதனின் அடையாளம். ஒரு மனிதனின் சுயத்தின் உயிர் துடிக்கும் புள்ளி. கூட்டத்தில் கரைந்து போதலுக்கும், பத்தோடு பதினொன்றாய் இழுபட்டுப் போதலும் எதிரான சுய பிரகடனம். முரணாய் இருப்பதற்கான தீர்மானம். இது எத்துணை முள்முடிகள் நிறைந்தது என்பதை இயேசுவின் வாழ்வே இரத்தமும் சதையுமாகப் பேசிவிடுகிறது. தன்னைத்தானே செதுக்கிச் செதுக்கி அழகான சுயம் பேணும் எம் ஆயரின் மிகத் தீவிரமான, மானிட இருப்பின் முன்மொழிவு. கரியாகப் பிறக்கிற நாம் – வைரமாவது வைராக்கியத்தால் தான்.

'நீ பிறந்தும் அழுதாய் மகனே. ஆனால் பிரபஞ்சம் மகிழ்ந்தது. உன் வாழ்க்கையை நினைத்துப் மற்றவர் அழ நீ மகிழ்சியோடு சாதல் வேண்டும்' என்ற சமஸ்கிருதப் பழமொழி ஒரு தலைவனின் வாழ்வில் எவ்வளவு பொருத்தமானது. பாதையில் கிடக்கும் சாணங்களால் உன் பயணங்கள் அழுக்காகி விடுவதில்லை என்பதை எம் ஆயர் விமர்சனங்களை எதிர்கொள்ளும் விதத்தில் படித்திட முடிகிறது.

இலையான்களைப் போல எப்போதும் அழுக்குகளில் மொய்த்துக் கிடக்காமல், தேனீக்களைப்போல பூக்களில் மொய்த்துக் கிடக்கும், அடர்த்தியான இறை நம்பிக்கையில் வேர்பிடித்த எம் ஆயரின் நேர் மறைச் சிந்தனை எம் மறை மாவட்டத்தை மகத்துவமான வளர்ச்சிப்பாதையில் நிலைநிறுத்துகின்றது.

சிறகு பிய்த்து விளையாடும் ஒரு குழந்தையின் மகிழ்ச்சிக்காக கவிதையைப் போல கிழிந்து போகிற வண்ணத்துப்பூச்சியைப் போல சிலுவையிலே தொங்கிய இயேசுவின் தியாகத்தில், எழிமையில், அன்பில், தற்கொடையில் எம் ஆயர் தொடர்ந்து நிறைக்கப்பட இறைவன் அருள் புரிய வேண்டி, வானம் போல காற்றுப் போல, கடல் போல எம் ஆயரின் வாழ்வு நீண்டு நிலைத்திட இனிய பிறந்த தினமதில் இதயம் நிறைந்து வாழ்த்துகின்றோம்.

**அருட்பணி.சி.அஜந்தன்.**

# சறா ஒரு சரித்திர நாயகன்

அந்த நாட்களை நினைத்துப் பார்க்கவே பயமாக இருக்கிறது. திரும்பும் திசையெல்லாம் மரண ஓலங்கள், பார்க்கும் இடமெல்லாம் உயிரற்ற உடல்கள், காண் போரெல்லாம் அங்கவீனர்களாக கையிழந்து, காலிழந்து, முகமிழந்து, சொல்ல முடியாத வேதனையின் கொடுமுடிக்குள்ளே வெந்துபோன மக்கள். யார் யாருக்கு ஆறுதல் சொல்வது. பயங்கரம் நிறைந்த ஒரு பிரதேசத்திலே, ஷெல் மழையினாலே நனைத்து கொண்டிருந்த இரத்த வெள்ளத்திலே மிதந்த மக்கள் திரள். இவைகளுக்கு மத்தியிலே பணியாற்ற நினைத்த ஒரு சில உள்ளங்கள் மத்தியிலே துணிவோடும், துடிப்போடும், மக்களின் துயர் நிறைந்த வாழ்வை முன்னிறுத்தி தனது பணியை இயேசுவோடு ஒப்பிட்டுப் பார்த்தவர் தான் அருட்தந்தை மரியாம்பிள்ளை ததேயுஸ் சறத்ஜீவன்.

நாங்கள் மாத்திரமல்ல அவரை அறிந்தவர்கள் அனைவரும் அவரை சறா என்றே அழைப்பார்கள். தனது வாழ்வு முழுவதுமே மற்றவர்களின் நலனுக்காக உழைக்க வேண்டும் என்கின்ற ஆர்வமும் ஆசையும் அவருக்கு சிறுவயதிலிருந்தே நிறைந்திருந்தது. பாடசாலையிலே துடிப்பான சாரணணாக பொறுப்பு வகித்த நாள் தொடக்கம் குருமட வாழ்வு, குருத்துவ வாழ்வு என்று தனது இந்தக் குறுகிய வாழ்வு முழுவதையுமே பிறர் அன்பின் ஆழத்திலே நிலை நிறுத்தி ஏழைகளின், அனாதைகளின், துயருறுவோரின் ஏக்கச் சிலுவைகளைத் தான் சுமந்து வாழ்ந்தவர் தான் சறா.

மெய் வருத்தம் பாராது, பசி நோக்காது, கண் துஞ்சாது மற்றவர் நலனில் அக்கறை கொள்வர் அன்று கேள்விப் பட்டுள்ளேன். எனது வாழ்விலே இவற்றையெல்லாம் செய்து வாழ்ந்த ஒருவரைச் சந்தித்தேன் என்றால் அது சறா மட்டும் தான்.

தனக்கென்று வாழாத ஒரு தயாள உள்ளம் அவருடையது. அழுகிறவர்களை அரவணைத்து துன்பப்படுவோரின் துயர் துடைத்து, இறந்தவர்களை அடக்கம் செய்த அவர் வாழ்வை உதாரணமாகக் கொள்ள வேண்டும்.

வன்னிப் போரின் இறுதி நாட்களில் சறாவும் நானும் ஒரே சிறிய ஒரு அறை போன்ற ஒரு இடத்தில் இருந்தோம். நாங்கள் இருவரும் தான் அந்த இடத்தைப் பாவிப்பதுண்டு என்னுடன் கதைக்கும் ஒவ்வொரு தடவையும் மக்களின் வேதனையை, துன்பத்தைப் பற்றியே பேசுவார். இறப்புக்களை அவரால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. சில குழந்தைகள்



இறந்ததைக் கண்டபோது சறா கண்ணீர் விட்டு அழுதார். எப்போதுமே அடுத்தவர் நலனில் அக்கறை கொண்ட ஒரு மனிதனை இல்லை புனிதனை நான் கண்டேன் என்பதில் எனக்கும் ஒரு திருப்தி.

இயேசு சபை அகதிப்பணியின் வன்னி இயக்குனராக இருந்து தன்னால் முடிந்த மட்டும் சேவை செய்தார் என்று மொட்டையாகச் சொல்லவே முடியாது. தனது சக்திக்கு அப்பாலும் சறா பணியாற்றினார் என்பதே உண்மையும், யதார்த்தமும், ஏனோ தெரியவில்லை சறாவிடத்திலே இனந்தெரியாத ஒரு துணிவும், துணிச்சலும் இருந்தது. அதனால் மிகப் பயங்கரமான, கஷ்டமான, உயிர் ஆபத்து நிறைந்த இடங்களுக்குக் கூட கால் நடையாகச் சென்று, மக்களைத் தேடி, நாடி, உதவிகள் செய்ததை எப்படி நாம் மறக்க முடியும்?

அனைத்திற்கும் மேலாக சறாவிடத்திலே இருந்த ஒரு அசையாத சக்தி ஆண்டவன் இயேசு. ஒவ்வொரு நாளும் திருப்பலி ஒப்புக் கொடுப்பார். தனது பணியாவற்றையும் இயேசுவோடு நிலை நிறுத்தினார். அதனால் இறை பராமரிப்பு எப்போதுமே, எல்லா நேரத்திலேயும் சறாவோடு பயணித்தது என்பதை மனநிறைவோடு சொல்ல முடியும்.

அந்த ஆண்டவன் இயேசு தான் இவரை அழைத்தார் என்பதில் சந்தேகமே இல்லை. நன்று நன்று, நம்பிக்கைக்குரிய நல்ல பணியாளனே தலைவனாகிய என்னுடைய மகிழ்ச்சியிலே பங்குகொள் என்று ஆசையோடு இயேசு அழைத்தபோது ஆம் என்ற உன் பதில் தான் உன் பணி வாழ்வின் நிறைவு சறா.

**அருட்பணி பிராயன்**

# எல்லா அலெக்சாந்தர்களும் இப்படித்தான்

என்ன சொல்லுறிங்க, உங்களுக்கு இது போதுமா? இன்னும் கொஞ்சம் தரட்டுமா? ஓம் இன்னும் கொஞ்சம் இருந்தால் நல்லம். அதையும் தாங்கோ என்று தானே நாம் சொல்லுவோம். என்னிடம் எவ்வளவு தான் இருந்தாலும் அடுத்தவனிடமுள்ளதன் மீது எப்போதும் ஒரு ஏக்கம், கறையானைப் போல மனசுக்குள்ளே இருந்து கொண்டு அரித்துக்கொண்டு இருக்கிறது. எதையோ நோக்கி நாம் எப்பொழுதும் ஓடிக்கொண்டே தானே இருக்கிறோம்.

தேன் சுவையில் இதயம் இலயிப்பதற்கு ஆயிரம் பூஞ்சோலைகளைச் சொந்தமாக்கவேண்டிய அவசியமில்லை தானே. வேலியோரம் சிலிர்த்துச் சிரிக்கும் செம்பருத்திப்பூப் போதுமே என்ற உண்மை வண்ணப்பூச்சிக்குத் தெரிந்திருக்கிறது. அதனால் வண்ணத்துப்பூச்சிகளின் உலகம் அழகானதாகவே இருக்கின்றது. எப்போதெல்லாம் தேவைகளைக் குறைத்துக் கொள்கிறோமோ : அப்போது சந்தோசம் அதிகமாக நிறைந்துவிடுகிறது. நிம்மதி உள் அறைக்குள் வந்து உட்கார்ந்து கொள்கிறது. கால்களில் தீப்பிடித்த மனிதர்களாக வியர்க்க வியர்க்க படபடப்புக்களோடு, நிற்க நேரமின்றித் திரிந்த நேரங்கள், ஒரு போதும் வாழ்வு வாழப்படுகிற கணங்களாக அமைவதே இல்லை. வானம் எளிமையானது. தண்ணீர் எளிமையானது. காற்று அதை ஏன் இத்தனை சிக்கல்களால் நிறைத்து விடுகிறீர்கள்?

மகா அலெக்சாந்தர் வெல்வதற்கு இந்த உலகம் போதாதே என்று கவலைப்பட்டுத் திரிந்த உலகச் சக்கரவர்த்தி அவன் இந்தியாவுக்குப் புறப்பட்டபோது டயோஜனீசைக் காணச்சென்றான். அந்தக் காலத்தில் அவர் மகா ஞானியாக திகழ்ந்தவர். அவர் மகா அலெக்சாந்தரிடம் "நீ எங்கே போகிறாய்? எதற்காக?" என்று கேட்டார். அதற்கு அவன் "நான் சின்ன ஆசியாவை வெல்லப்போகிறேன்" என்றான்.

அதை வென்றபின் என்ன செய்வாய்? என்று கேட்டார் ஞானி. 'இந்தியாவை வெல்வேன்' என்றான் அலெக்சாந்தர். 'அதற்கு பின்பு' "உலகத்தையே வெல்வேன்" அப்போது டயோஜனீஸ் ஆற்றங்கரை மணலில் நிர்வாணமாகப் படுத்திருந்தார். வெயில் காய்ந்து கொண்டிருந்தார். உலகம் முழுவதையும் வென்ற பிறகு என்ன செய்யப்போகிறாய் என்று அவர் மீண்டும் கேட்டார்."நான் அதற்குப் பிறகு நிம்மதியாக ஓய்வெடுப்பேன்" என்றான் அலெக்ஸ்சாந்தர்.

இந்தப் பதிலைக்கேட்ட ஞானி சத்தமாகச் சிரித்தார். சற்றுத் தூரத்தில் படுத்திருந்த தன் நாயைக் கூப்பிட்டார். அது அவர் அருகில் வந்து நின்றது. டயோஜனீஸ் அந்த நாயைப் பார்த்து "கேட்டாயா இவர் சொல்வதை?" உலகத்தையெல்லாம் வெற்றி கொண்ட பிறகு, இந்த மனிதர் ஓய்வெடுக்கப் போகிறாராம். இங்கே நாம் ஒரு சிறு துண்டு இடத்தைக்கூட வெல்லாமல் நிம்மதியாக ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறோம் என்றார். அலெக்சாந்தர் மனம் கேட்கவில்லை.

ஞானி சொன்னார் "நீ பாதி வழியில் திரும்பிவிடத்தான் போகிறாய். பயணம் முடிந்த பிறகு யார்தான் திரும்பி வந்திருக்கிறார்கள்.? இந்தியாவை வென்ற பின் நாடு திரும்புகையில் அலெக்சாந்தர் இறந்து போனான். கிறீசை அவன் அடைய முடியவில்லை.

உலகத்தில் இருக்கிற அத்தனையையும் அடைந்துவிட ஆசைப்படுகிற எல்லா அலெக்சாந்தர்களும் செத்துத்தான் போகிறார்கள். பாதி வழியிலேயே. அவர்கள் ஓடி ஓடிச் செல்வங்களைச் சேர்க்கிறார்கள். ஆனால் அவற்றை அனுபவிப்பதற்கு அவர்களுக்கு நேரம் அமைவதே இல்லை. அவர்கள் எல்லா இசைக் கருவிகளையும் திரட்டி விடுகிறார்கள். சரியான நேரத்தில் வாசிக்கும் சக்தியை இழந்துவிடுகிறார்கள். எல்லா வகையான உணவுப் பொருட்களையும் வாங்கி விடுகிறார்கள். உண்ண நேரம் கிடைக்கையில் நோய்ப்பட்டு உண்ண முடியாமல் போய்விடுகிறார்கள்.

சொந்தங்கள் எல்லாம் நட்சத்திரக் கூட்டம் போல சேர்ந்து சிரிக்கையில் நேரம் இல்லை என ஓடித்திரிவார்கள். இவர்களுக்கு நேரம் கிடைக்கும்போது சொந்தங்கள் யாருமே அங்கு இல்லாத வெறுங்கூட்டின் தனிமையில் மூச்சடங்கிக் கிடப்பார்கள். இறுதியில் அவர் மகள் வெறுங்கையுடன் ஒன்றுமில்லாமல் அழ ஆரம்பித்து விடுகிறார்கள். உலகையே உள்ளங் கையில் வைத்திருந்த அலெக்சாந்தரும் வெறுங்கையுடன் தானே இறந்து போனான். எல்லா அலெக்சாந்தர்களும் இப்படித் தான், ஒன்றுமே இல்லாமல்...

**அருட்பணி.சி.அஜந்தன்.**

# பக்தி தரும் சக்தி

## முகவுரை:

உயிர்களின் தோற்றம் - தாய் கருவில் சுமந்து, உருவம் தந்து, மடிமீது தலை வைத்து உறக்கங்கொள்ள, தாலாட்டுப் பாடி கண்ணயர்விக்கும் அன்னையர், இவ்வுலகிற்கு ஆண்டவன் கொடுத்த ஓர் ஈடிணையற்ற அன்புப் பரிசே. முதல் அன்னை ஏவாளின் வழிமரபில் தோன்றிய அன்னையரின் தன்னிகரில்லாத இருப்பு - அவர்களின் பங்களிப்பு இவற்றை உலகம் என்றென்றைக்குமே நிராகரிக்க முடிவதில்லை . அத்தகைய பெண்களுக்கு ஆசீர்வதிக்கப் பட்ட ஒரு பெண் ஒரு தாய் - புதிய ஏவாள் - எம் அன்னை மரியாள் முழு மனுக்குலத்தினதும் ஒரு மாணிக்க முத்தே. அத்தகைய மரியாள் மீது நாம் பற்றுறுதி கொள்ளவேண்டிய நியாயமான காரணங்கள், திவ்விய நற்கருணைக்கும் அன்னை மரியாளுக்கும் உள்ள உறவு, வணக்க மாதம் தேவதாயை நினைக்கும் காலம், மரியாள் வழி இயேசுவை அடைய துணைத் தலைப்புக்களில் இக்கட்டுரை விரிகிறது.

## பற்றுறுதி கொள்ள...

எங்கெங்கே தேவதாயாருடைய பக்தி அதிகரித்திருக்கிறதோ அங்கே இயேசுவினிடத்தில் கூடிய அன்பையும் காணக்கூடியதாக இருக்கின்றது. எந்த நாட்டு மக்கள் தமது வரலாற்றிலே, பதிதரின் கலாபனைகள் மத்தியிலும், நரகத்தின் கொடுவெறியின் எதிரிலும் தமது நம்பிக்கையைப் பாதுகாத்தார்களென்றால், அந்நாட்டு மக்கள் தேவதாயின் பக்தியை ஒரு சிறப்புப் பண்பாகக் கொண்டிருந்ததை அவதானிக்கிறோம். உலகில் வாழ்ந்தது போலவே, மாபெரும் புனிதர்களின் வாழ்விலும் இயேசுவோடு மரியா இணைந்தே இருப்பதைக் காண்கிறோம். ஆதித் திருச்சபை தனது எதிரிகளை வெற்றிகொண்டது.

அப்போஸ்தலர்கள் முதலில் விளக்கத்தில் தாமதமாக இருந்தாலும் விரைவில் மிகுந்த முன்னேற்றம் கண்டனர். இது பெந்தக்கோஸ்தே தினத்தன்று பொழியப்பட்ட தூய ஆவியின் கொடைகளின் பயனாக நிகழ்ந்ததென்பது உண்மையே. எனினும், காலத்தையும் நித்தியத் தையும் பிரிக்கும் திரையை நீக்கிவிட்டால், இயேசு விண்ணகம் சென்றபின் மரியா உலகில் வாழ்ந்தபோது அவரது செபங்களும் ஆலோசனைகளும் அப்போஸ்தலரின் வேற்றிக்கு ஒரு முக்கிய காரணமாக இருந்தன என்பதை நாம் கண்டுகொள்ளலாம். ஏனெனில், அவளே அப்போஸ்தலருக்காக மன்றாடி இக்கொடைகளை அவர்கள் பெறுவதற்கு வழிசெய்தாள். தேவதாய் தனது வல்லமையையும் இனிமையையும் பயன் படுத்தி தம் ஆன்மாவை மிகுந்த புனிதத் தன்மைக்கும் இறைவனோடு ஐக்கியத்திற்கும் இட்டுச் செல்லாத எந்த ஒரு புனிதரையும் வரலாற்றில் காண்பதரிது. ஒரு தாய் தன் பிள்ளைக்கு காட்டும் அன்பைவிட மிகுந்த அன்போடும் கரிசனையோடும் தேவதாய் தன் பிள்ளைகளைப் பாசத்துடன் பாதுகாத்து வருகிறாள். தேவதாயின் இனிமையை மக்கள் புரிந்துகொண்டால் உலகிலுள்ளோர் அனைவரும் அவளது காலடியில் சரணடைவர். அவள் அவர்களை யெல்லாம் தன் திருமகனான இயேசுவிடம் கொண்டு வருவாள்.

## வணக்கம் மாதாவுக்கு :

வைகாசி மாதம் தேவதாய்க்கு விசேட பக்தி செலுத்தும் காலமாக திருச் சபையால் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த முழு மாதமும் மரியாவுக்கே அளிக்கப்பட்டுள்ளது. அண்மைக் காலத்தில் இம்மாதம் திவ்விய நற்கருணையின் மாதாவின் மாதம் எனப் பெயரிடப்பட்டு வைகாசி 13ம் திகதி நற் கருணையின் மாதாவுக்கென ஒரு விசேட விழாவாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. திருச்சபை இயேசுவிடமிருந்து அவரது தாயாரைப் பிரிப்பதில்லை .

ஆச்சிரமங்களிலும் கன்னியர் மடங்களிலும் உள்ளே வந்து இயேசுவைச் சந்திக்குமாறு தனது பிள்ளைகளை அழைக்கும் பாவனையில் தேவதாயின் திருச் சுரூபம் அமைந்திருப்பதை நாம் எப்போதும் காணலாம். திருச்சபையின் அனைத்துச் செல்வங்களிலும் திவ்விய நற்கருணையே மேலான செல்வமாகும். எல்லா அருள்வரங்களுக்கும் இது ஊற்றாக இருப்பதுடன், இந்தப் பிரதேசத்தில் வாழும் விசுவாசிகளுக்கு ஆறுதலாகவும் இருக்கிறது. திவ்விய நற்கருணைக்காக நாம் தேவதாய்க்கு நன்றி கூற வேண்டும். மரியன்னை இயேசுவை உலகுக்குக் கொடுத்தாள். காணிக்கைத் திரு நாளன்று அவரைத் தேவாலயத்தில் ஒப்புக்கொடுத்தார். அந்தக் காணிக்கையை பெரிய வெள்ளியன்று நிறைவாக்கினாள்.

## அன்னை செய்யும் அறிமுகம்:

இயேசு திவ்விய நற்கருணையில் தம்மையே உலகில் விட்டுச் சென்றார். இயேசுவுக்காக நாம் மரியன்னைக்கு நன்றி கூற வேண்டுமாகையால் (திவ்விய நற் கருணைக்கும்) திவ்விய நற்கருணை என்னும் பொக்கிஷத்துக்கு நாம் அவளுக்கு நன்றிகூற வேண்டும். மரியாவின் மக்களாயிருப்பவர்களும், அவள் மட்டில் தமது அன்பைக் காட்ட சில பக்தி முயற்சிகளைக் கையாள்பவர்களும் திவ்விய நற்கருணை மட்டிலும் விசேட பக்தியுடையவர்களாக இருப்பதை நாம் எப்போதும் காணக்கூடியதாயிருக்கிறது.

சகல அருட்கொடைகளுக்கும் புனிதத் துவத்துக்கும் ஊற்றான நற்கருணையிடம் மரியா தனது பிள்ளைகளை அழைத்து வருவதாகத் தோன்றுகிறது. அதுபோலவே, இயேசுவும் தன்னிடம் பக்தியுள்ளவர்கள் தமது இனிய அன்னை யாகிய மரியாவிடமும் பக்தியுள்ளவர் களாக இருக்கவேண்டுமென்று விரும்பு கிறார். நாம இதை எதிர்பார்ப்பதற்குப் பல காரணங்களுண்டு. ஒரு தாயானவள் தனது மகனை தன் உறவினர்களுக்கெல்லாம் அறிமுகம் செய்ய விரும்புவாள். இது 2 போன்று மகனும் தன் அன்புக்குரியவர்கள் தனது தாயை அறியவேண்டும் அவளை மதிக்க வேண்டும் என்று விரும்புவது இயல்பு இயேசுவும் மரியாவும் மிக நெருக்கமாக ஒன்றித்திருப்பதால் ஒருவரிடம் பக்தியாக இருப்பவர்கள் மற்றவரையும் விரைவில் அறிந்து கொள்வர். இயேசுவோடு மிக நெருக்கமாக ஒன்றிக்க விரும்பினால் எமக்கு மரியன்னையின் துணையும் செபங்களும் தேவை. நாம் இந்த இனிய அன்னையின் பிள்ளைகளாக இருந்தால் அவள் விரைவில் சகல அருள்வரங்களின் ஊற்றாகிய திவ்விய நற்கருணையிடம் நம்மை அழைத்துச் செல் வாள். அநேக நாடுகளில் திவ்விய நற்கருணையின் மாதாவாகிய தேவதாயின் இந்த வணக்க மாதம் அவளுக்கு பகிரங்க வணக்கம் செலுத்தும் ஒரு மாதமாக இருந்து வந்துள்ளது.

> வணக்க மாதத்தில் மரியன்னை வழியாக கொடிய வாதையிலிருந்து முழு உலகையும் இறைவன் மீட்க அன்னையின் பரிந்துரையை நாடுவோம்.

## தோற்றது அலகை :

புனித பிலிப் நேரியார் இத்தாலியில அக்காலத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த பிறசமய விழாக்களிலிருந்து இளைஞர்களை சர்ப்பதற்காக பல பவனிகளை அறிமுகப்படுத்தினார். அவருக்கு அருளிய ஞானத்தால் இளைஞரது மீட்பின் இரகசியமே அவர்களை நல்ல காரியங்களில் அவர்கள் தொடர்ந்து ஈடுபடச் செய்வதே என்பதை அவர் உணரக் கூடியதாயிருந்தது. தேவதாயை மகிமைப் படுத்த அவர் இத்தாலி முழுவதிலும் பவனி களை ஏற்படுத்தினார். இதில் குறிப்பிட வேண்டியது யாதெனில், பசாசு எத்தகைய தந்திரங்களைக் கையாண்ட போதிலும், திருச்சபையை மேற்கொள்ள பெருமுயற்சி செய்த பதிதரால் இந்நாட்டை ஒருபோதும் கைப்பற்ற முடியவில்லை . தேவதாயின் பக்தி பதிதம், பிரிவினை, அவிசுவாசம் என்ப வற்றிற்கெதிரான சிறந்த பாதுகாப்பு என்பது இதனால் விளங்குகின்றதல்லவா? உலகப் போக்கான ஒழுக்கக்கேடுகளின் மத்தியில் குடும்பங்களின் முக்கிய பாதுகாப்புக்களில் ஒன்றாக இருந்தது செபமாலையே. குடும்ப செபமாலை அனுசரிக்கப்பட்டு வரும் நாடுகளில் விசுவாசம் இலகுவாக அழிக்கப்படவில்லை, மக்களின் பக்தி தலைமுறை தலைமுறையாக தொடர்ந்து வந்துள்ளது. கடந்த காலத்தில் தேவதாயிடம் அன்பைக் காட்டுவதற்கு வெளி அடையாளங்களால் அவளை மகிமைப்படுத்துவது வழக்கமாயிருந்தது. வருங்காலத்தில மாதாவின் பக்தி இன்னும் உள்ளார்ந்த விதமாக அமைந்து ஆன்மாக்களை மேலும் பரிசுத்தமாக்கும். எங்கள் வீடுகளில் மாதாவின் திருச்சுரூபத்தைப் பீடத்தில் வைத்து, அலங்கரிப்பதாலும் அவளை மகிமைப்படுத்துகிறோம். வருங்காலத்தில் இவற்றோடு திவ்விய நற்கருணையில் இயேசுவுக்குக் காட்டும் விசேஷ அன்பும் சேர்த்துக் கொள்ளப்படும்.

## பக்தி தரும் சக்தி:

தேவதாயின் திருநாளைக் கொண்டாடும் அதிசிறந்த வழி அந்நாளில் நற் கருணை பெற்று எமது



**அருட்பணி றெஜிஸ் இராஜநாயகம்**

உள்ளத்தில் இயேசுவுக்கு கோயில் அமைப்பதாகும். நற் கருணை ஆண்டவரிடம் கூடிய அன்பு செலுத்துவதாலும் வணக்கமாதம் வருங்காலத்தில் மேலும் புனிதமாகும். திவ்விய நற்கருணையின் மாதா என்னும் சிறப்பான பெயர் தேவதாய்க்கு வருங்காலத்தில் நிலைத்திருக்க வேண்டு மானால் அவளது பக்திக்கென விசேஷமாக ஒதுக்கப்பட்ட இம்மாதத்தில் நற்கருணை நாதர் மீதும் அன்பு அதிகரிக்க வேண்டும் என நாம் எதிர்பார்ப்பது இயற்கை, வருங்காலத்திலும் தமது வீடுகளில் தொடர்ந்து செபமாலை சொல்பவர்கள். இச்சிறு பக்தி முயற்சிகள் குடும்பங்களில் பரிசுத்த தனத்தை வேரூன்றச் செய்கின்றன. தேவதாயின் படமும், தேவதாயின் பகதியும் எத்தனையோ வீடுகளைப் புனிதப்படுத்தி, புண்ணியமும் சுயர் பரித்தியாகமும் நிறைந்த வாழ்வுக்கு கவரும் வழிகளாகும். இலட்சக்கணக்கான குடும்பங்களின் தூய்மைக்கும், பரிசுத்ததனத்துக்கும் பிறப்பிடமாயிருந்தது. தேவதாயின் மட்டில் அவர்கள் கடைப்பிடித்த சிறு சிறு பக்தி முயற்சிகளாயிருக்கலாம். தேவதாயின் மீது அவளது பிள்ளைகள் கொண்டுள்ள குழந்தைக்குரிய நம்பிக்கை இறையருளின் ஊற்றாக இருந்து மக்களை செபிக்கத் தூ ண்டுகிறது. அவர்களது உள்ளத்தை இனிமையானது எதுவோ, அன்பானது எதுவோ, பண்பானது எதுவோ, மேன்மையானது எதுவோ அதனை நோக்கி எழுப்புகிறது.

இயேசுவை உண்மையாக ஆராதிப்பதற்கு மரியன்னை ஒரு முன் மாதிரிகையாக இருக்கின்றாள். ஆகவே, கடந்த காலங்களை விட எதிர்காலத்தில் அவளது மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் நற்கருணையில் இயேசுவைச் சந்திப்பார்கள் என நாம் எதிர்பார்க்கலாம். அநேக மக்கள், முக்கியமாக சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் உலகப்பற்றுடையோருடன் உறவாடுவதிலும், பத்திரிகைகள் வாசிப்பதிலும் தமது பொழுதை வீணாக்குகிறார்கள். ஆண்டவர் பரலோகம் சென்றபின் தேவதாய் தமது திருக்கு மாரனிடமிருந்து பிரிந்திருக்கவில்லை. வருங்காலத்தில் மரியன்னையின் மக்களும் தமது தாயாரைப் போலவே நற்கருணைப் பேழையின்முன் அதிக நேரத்தைச் செலவிடுவதைக் காணலாம். அவர்கள் புனிதத் தன்மையிலும் பக்தியிலும் வளர்வார்கள்.

இயேசுநாதர் தாமே அவர்களது உள்ளத்துக்கு ஒளியூட்டி அவர்கள் மென்மேலும் பூரணத்துவம் அடைய அவர்களைத் தூண்டுவார். மாதாவிடமிருந்து நாம் இயேசுவிடம் செல்கிறோம். தேவதாய் பக்தி, செபமாலைப் பக்தி, திரு இருதயப் பக்தி இவையனைத்தும் நற்கருணை ஆண்டவரிடம் இட்டுச் செல்லும் வழிகளாகும். மே மாதம் உண்மையாகவே தேவதாய்க்குப் பக்தி செலுத்தும் மாதமாக இருப்பதாக இந்த இனிய அன்னை எம்மை இயேசுவின் பாதத்துக்கு அழைத்துச் செல்வாளாக அங்கு நாம் இறைவனுடைய இதயத்தின் உள்ளேயே வாழ்வோம். திரு இருதயத்தின் அன்புக் கனவில் எமது குற்றங்கள் எல்லாம் சுட்டெரிக்கப்பட்டுவிடும்.




# அவசரகாலப் பதில்?

அருட்தந்தை செ. அன்புராசா, அமதி அடிகளார் **'என் கேள்விக்கென்ன பதில்!'** என்ற பகுதியை கடந்த வாரம்வரை எழுதிவந்தார். காலத்தின் அறிகுறிகளைக் கருத்தில் கொண்டு அவரின் பதில்கள் **'அவசரகாலப் பதில்'** என்ற தலைப்பில் தொடர்ந்து வெளிவரும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். வாசகர்களாகிய நீங்கள் கேள்விகளைக் கேட்டு பயனடைய இப்பகுதியைப் பயன்படுத்துங்கள். ஆர்

**அருட்பணி செ. அன்புராசா**

(காந்தன், கொழும்பு)

**கேள்வி: உலகின் பென்னம்பெரிய நாடுகளையும் உலக நடப்புக்களையும் முடிக்கிவிட்டதே கொரோனா! இது சொல்லும் செய்திகள் என்ன?**

**ப:** பல செய்திகள் உண்டு காந்தன்! அவற்றில் எனக்கு முக்கியமாகப்படுவது கொரோனா கற்பித்த பாடம் என்று ஒருவர் சில நாட்களுக்கு முன் எழுதியிருந்தது. கொஞ்சம் சிந்திக்கத் தூண்டுவதாக உள்ளதால் அதனை அவதானிப்போம். 'புனிதத் தலமான மெக்கா வெறிச்சோடிக் கிடக்கிறது. ஈரானில் வெள்ளிக் கிழமைத் தொழுகை தற்காலிகமாய் நிறத்தி வைக்கப் படுகிறது. வத்திக்கானில் திருத்தந்தை பொதுமக்களை சந்திப்பதை நிறுத்திக் கொண்டார். இந்தியாவில் கோலிப் பண்டிகை கொண்டாடுவதை பிரதமர் தவிர்க்கிறார். முதலில் உயிர். அதற்கு பிறகுதான் மதம் என்று ஒவ்வொரு முறையும் இயற்கைப் பேரழிவுகள் நிரூபித்தாலும் துயரம் முடிந்தவுடன் மீண்டும் மதங்களை தூக்கிக்கொண்டு சுமக்கவே துடிக்கிறது இந்த பாழாய்ப்போன மனம். கற்றுக்கொள்வோம் மதம் பிடிக்காமல் வாழ்வதற்கு!...' எப்போது இதனை உணர்ந்து மதம்பிடிக்காத, மனித சாயலாக இறைவன் உருவாக்கிய அந்த உத்தம மாண்புடைய உண்மை மனிதர்களாய் உருமாறப் போகின்றோமோ!?

(சாந்தி, யாழ்ப்பாணம்)

**கே: கொரோனா வைரஸ் தாக்கத்தினால் ஆலய வழிபாடுகள் எல்லாம் நிறுத்தப்பட்ட நிலையில் ஞாயிறு திருப்பலிக்குச் செல்லாவிட்டால் அது பாவம் இல்லையா?**

**ப:** சாந்தி, ஞாயிறு திருப்பலிக்குச் செல்லக்கூடிய நிலையில் இருந்தும் ஒருவர் செல்ல மறுப்பது அல்லது செல்லாமல் விடுவது தவறானது. ஆனால், கொரோனா போன்ற ஆட்கொல்லி நோயோன்று பரவும் நேரத்தில் நீங்கள் மற்றையவர்களின் தொற்றுக்குக் காரணமாகாமல் இருப்பதும், தொற்றுக்குள்ளானவர்களுக்கு உதவும் மருத்துவ தெய்வங்களுக்கு நீங்கள் தொற்று வராமல் பாதுகாத்துக்கொள்வதும் இன்றைய சூழலில் ஒரு பெரும் பிறரன்புச் செயல்! மேலும், மக்கள் நெருக்கமாகக் கூடும் இடங்களில் இத்தொற்று அதிகம் இடம்பெறுகின்றது. ஆகவேதான், மக்கள் கூடும் இடங்களைத் தவிர்க்கும்படி கூறியிருக்கின்றார்கள். இந்நோய்க் கிருமி மற்றையவர்களால் உங்களுக்குத் தொற்றவதை நீங்கள் விரும்புவீர்களா? இல்லையே! 'உன்னை நீ அன்புசெய்வதுபோல மற்றவர்களையும் அன்புசெய்யுங்கள்' என இயேசுவின் வார்த்தை, இங்கு கூட நிறைந்த அர்த்தம் பெறுகின்றது. இந்நோய்க் கிருமி பரவாமல் இருக்கவும் பரப்பாமல் இருக்கவும் ஒவ்வொருவரும் என்னென்ன செய்யமுடியுமோ அவற்றைச் செய்வதால் நாம் மற்றவர்களை அன்பு செய்கின்றோம் என்று அடித்துச் சொல்வேன்.

(மலர், மன்னார்)

**கே: திருப்பலியில் பங்கேற்காததால் மனதுக்கு பெரும் சுமையாக இருக்கின்றது. என்ன செய்யலாம்?**

**ப:** மலர், "பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லாரும் என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்' (மத்தேயு11:27) என இயேசு இந்நாள்களிலும் உன்னையும் என்னையும் அழைக்கின்றார். இயேசுவை நம் வாழ்க்கைப் பயணத்தில் பல வடிவங்களில் சந்திக்கின்றோம். திருவருட்சாதனமாகிய திருப்பலியிலும் இயேசுவைச் சந்திக்கின்றோம். அதே இயேசு, தமது வார்த்தையின் வழியாகவும் நம்முடன் பேசுகின்றார். 'மனிதன் அப்பத்தினால் மட்டுமல்ல, மாறாக, கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும் வாழ்வர்' (மத்.4:4) என இயேசு மேலும் கூறுவார். ஆகவே, எங்கள் எண்ணப் படிமங்களை கால சூழமைவுக்கு ஏற்ப ஏற்றுக்கொண்டால் திருப்பலியில் பங்கேற்றுப் பெறுகின்ற சுகத்தினை, ஆன்மீக பலத்தினை, இறை அனுபவத்தினை இறைவார்த்தையை வாசிப்பதின் ஊடாகப் பெறமுடியும். திருப்பலியில் இயேசுவின் உடலையும் இரத்தத்தையும் உண்டனுபவிப்பதுபோல இறைவார்த்தையைப் படித்து அனுபவிக்க முடியும். இந்நாள்களில் விவிலியத்தை முழுமையாக வாசிக்க ஒரு முயற்சிசெய்யலாம் அல்லவா!

(மல்லிகா, முல்லைத்தீவு)

**கே: திருப்பலிக்கு ஈடாக ஏதேனும் வழிபாடு இல்லை என நினைக்கின்றேன்! அவ்வாறாயின் இக்கொரோனாவினால் வீடுகளில் இருக்கும்போது எப்படி அதனை ஈடுசெய்யலாம்?**

**ப:** மல்லிகா, திருப்பலிக்கு ஈடாக எவ்வழிபாடும் இல்லைத்தான்! ஆனால், திருப்பலியில் பங்கேற்க சந்தர்ப்பங்கள் அமைகின்றபோது அவற்றைப் பலவேளைகளில் பயன்படுத்தாது திருப்பலி இல்லாதபோது அதனை நினைத்து வருந்துகின்ற நிலைமைதான் இப்போது நிலவுகின்றது! உண்மையில், கொரோனா தாக்கத்தினால் ஆலயங்களில் திருப்பலிகளும் ஏனைய வழிபாடுகளும் தற்காலிகமாக நிறுத்தப்பட்ட நிலையில்தான் இவற்றின் அருமையைப் பலர் உணர்ந்திருக்கின்றார்கள் என்றும் காணக்கிடக்கின்றது. உதாரணமாக, சாப்பாடு அந்தந்த நேரத்தில் கிடைக்கின்றபோது அதன் அருமை பெருமை தெரியாது! சாப்பாடு இல்லாத போதுதான் ஒரு சொட்டுக் கஞ்சியினுடைய, ஒரு துண்டுப் பாணினுடைய, பாதி றொட்டியினுடைய அல்லது கொட்டிய உணவினுடைய பெறுமதி புரியும்!

(சாளினி, யாழ்ப்பாணம்)

**கே: கொரோனா வைரசை வைத்துக்கொண்டு உலக முடிவு வந்துவிட்டது எனச் சிலர் கூறிவருகின்றார்களே! நீங்கள் என்ன சொல்கின்றீர்கள்?**

**ப:** சாளினி, உலக முடிவு என்று நான் சொல்லமாட்டேன். ஏனெனில் நான் உலகைப் படைத்தவன் அல்ல! ஆனால், ஒன்றைக் கொஞ்சம் உறுதியாகச் சொல்லலாம் என நினைக்கின்றேன், அதாவது, உலகைத் தொடர்ந்து உலுப்பப்போகும் அனர்த்தங்கள் சில வரிந்து கட்டிக் கொண்டு வரிசையில் நிற்கின்றன! இவ்வரிசை, உலகு வெப்பமாதல், வறட்சி, நீருக்கான நெருக்கடி என நீளப் போகின்றது! அதன் ஒரு பகுதியாகத்தான் கொரோனா வைப் பார்க்கவேண்டும்போல் தோன்றுகின்றது. மனித குலம் தொடர்ந்து இயற்கையில் கை வைத்தால், அடிக்கடி கைகழுவ வேண்டிய நிலைமைகள்தான் உருவாகும் என்பதை கொரோனாக் கிருமி கட்டியம் கூறிநிற்கின்றது!

(சசி, யாழ்ப்பாணம்)

**கே: திருப்பலி இல்லாது சும்மா இருக்கின்றோம். ஏதாவது வழி சொல்லுங்கள்?**

**ப:** இறைவார்த்தையை வாசித்தல், செபமாலை செபித்தல், தனிமையில் இறைவேண்டல் செய்தல் போன்றவை எவ்வளவு அருமையான ஆன்மீகச் செயற்பாடுகள்! செபமாலையைச் செபிக்கின்றபோது அதில் இறைவார்த்தைகளைச் செபிக்கின்றோம், இறைவனின் மீட்புத் திட்டத்தைத் தியானிக்கின்றோம், இறைவனின் திருவுளத்தைத் கண்டுகொள்கிறோம். வெண்ணையைக் கையில் வைத்துக்கொண்டு நெய்க்கு அலைபவர்கள் நாங்கள்! புரிகிறதா சசி அக்கோய்!

(விடலை, மன்னார்)

**கே: கொரோனே வைரஸ்சின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த அரச பணியாளர்களை வீட்டிலிருந்து பணிசெய்யும்படி அரசு பணித்திருப்பதாகக் தகவல்! பணி செய்வார்களா?**

**ப:** விடலை, 'ஒப்பிஸ்' இல் இருந்தே ஒழுங்கா வேலை பார்க்காத சில பாக்கியவான்கள், வீட்டிலிருந்து எப்படி ஐயா வேலை பார்க்கப் போகின்றார்கள்!?

(கோட்டையான், யாழ்ப்பாணம்)

**கே: கொரோனாக் கிருமியின் கொடுமைகள் எப்போது முடிவுக்கு வருமா?**

**ப:** அடிக்கடி கைகளைக் கழுவுவதனாலும் வீட்டில் (எவ்வளவு காலம்???) அமைதியாக இருப்பதனாலும் முடிவுக்கு வரும்! இல்லையென்று அக்கறையற்று அறிவுபூர்வமாக செயலாற்றவில்லை என்றால் முடிக்க உடன் வரும்!

(மதி, யாழ்ப்பாணம்)

**கே: கொரோனாக் கிருமியின் தொற்றினைத் தடுக்கும் முகமாக மக்களை தனிமைப்படுத்துவதற்காக ஊரடங்கு உத்தரவு பிறப்பித்தும் சில முண்டங்கள் சுற்றித் திரியுதுகளே! அதுகளை என்ன செய்யலாம்?**

**ப:** மதி, மிகச் சிறப்பான வழி இருக்கின்றது! அதனை ரஸ்ய அதிபர் புட்டின் சொல்லியிருக்கின்றார். கொரோனாக் கிருமியை இல்லாதொழிக்க ரஸ்ய குடிமக்களுக்கு இரண்டு தெரிவுகளில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கும்படி கொடுத்திருக்கின்றார்: பதினைந்து நாள்கள் வீட்டில் இருப்பது அல்லது ஐந்து ஆண்டுகள் சிறையில் இருப்பது! நம் நாட்டில் நடைமுறைப்படுத்தினால் ஒரு பயலும் வீட்டைவிட்டு வெளியே போகமாட்டான் என்பது சர்வ நிச்சயம்!

(மரியா, உயரப்புலம்)

**கே: மே மாதத்தில் மரியாவின் திருத்தலங்களுக்கு யாத்திரைகள் போய் வருவது வழக்கம். நானும் போய்வருவதுண்டு. இம்முறை அவ்வாய்ப்பில்லாத போது யாது செய்யலாம் ?**

**ப:** மரியா, உமது கேள்வி காலத்திற்கு ஏற்றதே. ஏற்கனவே இக்கேள்விக்கு எம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அழகான பதில் ஒன்றைக் கூறியுள்ளார்.

**"இவ்வாண்டு கொரேனா தொற்று நோய் அச்சம் காரணமாக, மக்கள், வீட்டில் இருந்தவாறே, மரியன்னையின் திருத்தலங்களுக்கு, ஆன்மீக முறையில் பயணம் மேற்கொள்ளலாம்"**

**திருத்தந்தை பிரான்சிஸ்**

# இறை நம்பிக்கை இன்றைய சூழலில் அர்த்தமற்று போகின்றதா?



அருட்தந்தை சியான்ஸ்ரன் ஜெனிஸ், அமதி

**கொ**ரோனா தொற்று நோயினால் ஊரே, ஏன் உலகமே அடங்கிப்போன காலத்தை நானும் நீங்களும் நன்றாக அனுபவித்து இருக்கின்றோம். அவ்வாறான ஒரு காலகட்டத்தில் சில சமூகவலைத்தளத்தில் மிகவும் பயனுள்ள சிந்திக்க வைக்கும் பதிவுகளை வாசித்தேன். அவற்றில் ஒன்று "செவ்வாயில் கால் வைப்போம் எண்டு சொன்னவங்க எல்லோரும் பக்கத்து வீட்டிற்கே ஒரு அடி எடுத்து வைக்க முடியல"

உண்மைதான். இவ்வாறான ஒரு சூழ்நிலையில் எமது ஆன்மீக வாழ்வும், எம் உடல் ஆரோக்கிய வாழ்வும் முழுமையாக எமது கைகளில் ஒப்படைக்கப்பட்டிருந்தது. கோயில்கள் மூடப்பட்டன, திருப்பலிகளுக்கு செல்லமுடியாத நிலை, இவ்வாறான ஒரு சூழ்நிலையில் எம் விசுவாசம் எந்தளவுக்கு எங்களுடைய வாழ்வுக்கு அர்த்தமாக அமைகிறது? என்று சிந்திக்க ஆரம்பித்தேன்.

திருப்பலிகள் இல்லை ஆனால் நாம் வாழ்ந்தோம்தானே. கொரோனா தொற்று நோயின் போது ஆன்மீகம் தேவையில்லை உடல் ஆரோக்கியம்தானே தேவையாக இருந்தது. திருவருட்சாதனங்கள் தேவையில்லை ஆனால் நோய் எதிர்ப்பு சக்திதானே அத்தியாவசியமாக இருந்தது. ஆன்மீக ஊட்டம் தரும் உணவு தேவை இல்லை, உடலுக்கு உரிய சக்தியைத் தரக்கூடிய உணவு வகைகளைத் தானே தேடி அலைந்து வாங்கினோம். அப்படியென்றால் எங்களுடைய விசுவாசம் எங்களுடைய வாழ்வுக்கு எந்த வகையில் உதவுகின்றது என்று கேள்வி கேட்பது எமது மன அங்கலாய்ப்புக்களுக்குத் தெளிவு கிடைக்கும் என நம்புகிறேன்.

கடவுள் எங்களுக்குத் தேவைதானா? நாங்கள் வேலை செய்தால் தானே பணம். அந்தப் பணத்தின் மூலம் எங்களுடைய தேவைகள் நிறைவேறுகின்றன. யோகாசனம், உடற்பயிற்சி செய்தால் உடம்பு வலிமை பெறுகின்றது. மனம் ஆறுதல் அடைகின்றது, நரம்புகள் உறுதியடைகின்றன. அந்த வகையில் நாங்கள் உழைத்தால் தான் எங்களுக்குச் சோறு, வேறு யாரும் வந்து ஊட்டமாட்டார்கள் என்பது எங்களுடைய வாழ்க்கைத் தத்துவமாக இருக்கின்றது. எனவே ஒன்றை செய்வதன் மூலம் அதன் பலனை உடனே அல்லது குறுகிய காலத்தில் அனுபவிக்கிறோம். அந்த வகையில் எமக்கு விடுதலையும், ஆறுதலும் கிடைக்கின்றது, எமது தேவைகள் நிறைவு காண்கின்றன.

இந்த "விடுதலை" பற்றித்தான் எல்லா மதங்களும் பேசுகின்றன. சமூகக் கட்டமைப்புக்களோ, போராட்டங்களோ, ஆர்ப்பாட்டங்களோ, ஆன்மீகப் போதனைகளோ எல்லாமே மனித விடுதலையை மையப்படுத்தியதாகத்தான் இருக்கின்றது, இருக்க வேண்டும். அந்த வகையில் எங்களுடைய நாட்டில் இடம்பெற்ற ஆயுதப் போராட்டம் ஒரு மனித உரிமைக்கான, விடுதலைக்கான ஒரு போராட்டமாக இருந்தது. மேலும் நாங்கள் செய்திகளில் வாசிக்கும் போராட்டங்கள் எல்லாம் ஒரு விடுதலையை, மனித மேம்பாட்டை நோக்கியதாக இருக்கின்றது.

சம்பள உயர்வுக்கான போராட்டம், நீதிக்கான போராட்டம் என்று எல்லாமே ஒரு மனித விடுதலையை நோக்கியே இருக்கின்றன. இவ்வாறான ஒரு விடுதலையைத்தான் மதங்களும் அடிப்படையாக கொண்டிருக்கின்றன. இதை மையப்படுத்தி சில கிறிஸ்தவ அடிப்படைவாத சபைகளும் "விடுதலைப் பெருவிழா" 'எழுப்புதல் செபவழிபாடு,"குணமாக்கும் வழிபாடு' என விடுதலையை நோக்கிய செபவழிபாடுகளை முன்னெடுக்கின்றன.

அந்தவகையில் இந்துமதம் "முத்தி" என்றும், புத்த சமயம் 'நிர்வாணம்' என்றும், கிறிஸ்தவ சமயம் 'மீட்பு,"கடவுளுக்கு ஏற்புடைமையாகுதல், முடிவில்லா வாழ்வு, விண்ணகம்' என்றும் போதிக்கின்றன. ஆனால் இப் போதனைகள் எந்தளவுக்கு யதார்த்தமாக இருக்கின்றன? எந்தளவுக்கு மனித வாழ்வுக்கு உதவுகின்றன? கொரோனா தொற்று நோய் காலத்தில் எம் மதம் அல்லது எம் விசுவாசம் எந்தளவு எங்களுக்கு உதவிசெய்தன, மருத்துவம் தானே எமக்குக் கடவுளாக இருந்தது. இவ்வாறு பல கேள்விகள் எம் உள்ளத்தில் எழுந்தன. உங்களில் எழுந்திருக்கலாம். அந்தவகையில் எமது விசுவாசம் அர்த்தமற்றுப் போகின்றதா? எம் விசுவாசம் எம் நாளாந்த மனித வாழ்வுக்கு அப்பாற்பட்டதா? எம் விசுவாசம் ஒரு கோட்பாடா? இவ்வாறான கேள்விகளுக்கு மத்தியில் எமக்கு விசுவாசம் தேவையா? என்ற கேள்வி கேட்பது சரியாக இருக்கும். சில வேளைகளில் நாம் அன்றாடம் பார்க்கும் நிகழ்வுகள் எமக்கு சவாலாக இருக்கும்.

"பாதர் எங்கட ஊரில ஒரு குடும்பம் இருக்கு". அவங்க கோயிலுக்கு வாரதும் இல்லை , பூசைக்கு வாரதும் இல்லை". ஆனால் நல்லா இருக்கிறாங்கள்" ஆனால் நாங்கள் ஒரே கோயிலும் பூசையுமா இருக்கிறோம் எங்களுக்குத் தான் எல்லா வருத்தமும் சோதனையும் வருது"

**வேறு ஒரு உதாரணம்:**

"எனக்கு கடவுளில் நம்பிக்கை இல்லை, ஆனால் நான் நல்லாத்தான் இருக்கிறேன். கஸ்ரப்படுறவங்களுக்கு உதவிசெய்கிறேன். நல்ல ஆரோக்கியமாகக் குடும்பத்தோடு சந்தோசமாக இருகிறேன். என்னத்துக்கு கோவில் பூசை எண்டு காலத்தை க் கடத்துவான்."

இவ்வாறான பேச்சுக்களை நாங்கள் நிறையக் கேட்டிருப்போம். 'அப்போ விசுவாசம் எங்களுக்கு என்னத்துக்கு தேவை?" கடவுளில் நம்பிக்கை வைத்து வாழ்வோருக்கும் நம்பிக்கையற்று வாழ்வோருக்கும் என்ன வித்தியாசம்? எப்படியும் வாழ முடியுமா?' என்ற கேள்விகளைத் தொடுத்து எனது சிந்தனையை எழுத விரும்புகின்றேன்.

கொரோனா தொற்றுநோயின்போது நாங்கள் எல்லோரும் எங்களுடைய வீட்டிலேயே முடக்கப்பட்டிருந்தோம். நாட்கள் செல்லச் செல்ல வீட்டில் இருப்பது எமக்கு மிகுந்த சிரமமாக இருந்தது. பாரிய மன உளைச்சல், எங்களது நண்பர்களை, உறவுகளை பிரிந்து நின்றோம். எமக்கு நட்புகளும், உறவுகளும்தான் முக்கியம் என்று உணர்ந்து கொண்டோம். எங்களுக்கு எல்லாம் இருக்க என்றால் என் குடும்பம், என் பொருட்கள் என்று சந்தோசமாக இருந்திருக்கலாம் தானே. அந்த நேரத்தில் நாங்கள் என்னத்தைத் தொலைத்தோம் என்று நினைத்தால் வேறு ஒன்றும் இல்லை உறவு என்று சொன்னால் அந்த உண்மையை மறுக்க முடியாது.

"என்ன வாழ்க்கை இது சீ...சீ.. எத்தனை நாட்கள்தான் வீட்டுக்குள்ளேயே இருக்கிறது".. ஐயோ கடவுளே எப்பதான் முடியுமோ? இப்படியே போனால் பைத்தியம் தான் பிடிக்கும் போல"

எமக்கு உறவுதான் முக்கியம். உறவு இல்லாவிட்டால் எங்களுக்கு பைத்தியம் பிடிச்சிடும் என்று இந்த ஊரடங்கு நமக்கு நன்றாக கற்பித்து இருக்கின்றது. எனவே மனித வாழ்வு உறவு சம்மந்தப்பட்டது. ஒரு தனி மனிதனாக நாம் வாழமுடியாது. மனிதன் ஒரு சமூகப் பிராணி. இதனைத்தான் திருவிவிலியத்தில் வாசிக்கின்றோம். "ஆண்டவராகிய கடவுள் மனிதன் தனிமையாக இருப்பது நல்லதன்று: அவனுக்குத் தகுந்த துணையை உருவாக்குவேன் என்றார். எம் மனித வாழ்வு உறவினால்த்தான் அர்த்தம் பெறுகின்றது. இந்த உறவு எம் நலம் சார்ந்தது மட்டுமல்ல மாறாக சமூகம் சம்மந்தப்பட்டது. இதனைத்தான் மத்தேயு நற்செய்தியில் (25:31-46) வாசிக்கின்றோம். "நான் பசியாக இருந்தேன் உணவு கொடுத்தீர்கள். தாகமாய் இருந்தேன் என் தாகத்தை தணித்தீர்கள்: அன்னியனாக இருந்தேன், என்னை ஏற்றுக் கொண்டீர்கள்". (மத்25:35) இவற்றை எல்லாம் எப்போது செய்தோம் என்று மக்கள் கூட்டத்தினர் கேட்கும்போது இயேசு கூறுகிறார்.

"மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன். (மத் 25:40).

இவ்வாறான ஒரு வாழ்வுதான் எமக்குத் தேவையாக இருக்கின்றது. இதனைத்தான் எமது விசுவாசமும் சொல்கிறது. கிறிஸ்தவ வாழ்வு என்றால் என்ன? அது வேறு ஒன்றும் இல்லை மாறாக அன்பில் கட்டப்பட்ட ஒரு உறவு. அன்பு இல்லையேல் கிறிஸ்தவம் இல்லை. கிறிஸ்தவம் இல்லையேல் நல்ல உறவு இல்லை. நல்ல உறவு இல்லையேல் எமது மனித வாழ்வு அர்த்தமற்றுப் போகும். எனவே இதிலிருந்து எமக்குத் தெளிவாகப் புரியும் அதாவது எம் விசுவாசம் எமது வாழ்வுக்கு அர்த்தம் கொடுக்கின்றது. எம் வாழ்வை நல்லமுறையில் வாழ உதவி செய்கின்றது. எமக்கு உண்மையான மன சந்தோசத்தையும் நிம்மதியையும் எம் நம்பிக்கை பெற்றுத் தருகிறது.

கிறிஸ்தவம் இல்லையேல் நல்ல உறவு இல்லையா? அது எப்படிச் சொல்ல முடியும் என்று கேள்வி கேட்க முடியும். நாங்கள் எல்லோரும் உதவி செய்கின்றோம். அதனைக் கடவுளில் நம்பிக்கை உள்ளவரும் செய்வார் நம்பிக்கை அற்றவரும் செய்வார். உதவிசெய்வதன் மூலம் நாங்கள் நல்ல உறவைப் பேணுகின்றோம். எம் மனதுக்கு திருப்தியாக இருக்கின்றது என்று வாதாட முடியும். இங்கே "பிறர்மேல்காட்டும்அன்பின்இயல்பு"வேறுபடுகின்றது. அது எவ்வாறு என்றால் கடவுள்மேல் நம்பிக்கையற்றவர் தனது மனத் திருப்திக்காக மற்றவர்களுக்கு உதவி செய்வார். அதனால் அந்த அன்பில் சுயநலம் இருக்கின்றது. " நான் எனது சந்தோசம்" என்ற அடிப்படையில் உதவி செய்வார். ஆனால் கடவுள் நம்பிக்கை உள்ளவர் இந்த சுயநலத்தை தாண்டி உதவி செய்கிறார். இங்கேதான் எம் விசுவாசம் பெரும்பங்கு வகிக்கிறது. அது எவ்வாறெனில் எம் விசுவாசம் இந்த சுயநலத்தைத்தாண்டிஒருபரந்த நோக்கில் எம் கரங்களை நீட்ட உதவிசெய்கின்றது. ஏன் என்றால், நாங்கள் நம்பும் கடவுள் அன்பையே தன் இயல்பாகக் கொண்டவர். கடவுள் என்ற தனது நிலையில் இருந்து எம்மைத் தேடிவந்து எமது மனித இயல்பில் பிறந்து எமக்காகத் துன்பங்கள் பட்டு எமக்காக இறந்தார். இந்த அன்பு எல்லைகளைக் கடந்தது. ஒரு தனி இனமோ, மதமோ கடந்த அன்பு. ஆனால் ஒரே ஒரு குலம்தான் அது மனிதகுலம். அந்தவகையில் இந்தக் கடவுளில் நம்பிக்கை வைக்கும் போது நாம் ஒவ்வொரு மனிதரையும் நாம் நம்பும் கடவுளின் சாயலாகப் பார்க்கின்றோம். இவ்வாறு சிந்திக்கும் போது எமது மனித வாழ்வு அர்த்தம் பெறுகின்றது. ஏன் என்றால் கடவுள் எமது மனித இயல்பைப் பற்றிக்கொண்டார். அவர் கடவுள் நிலையில் இருந்து எம்மைப்போல வாழ்ந்தார். இவ்வாறு நாம் இருக்கும்போது நிச்சயமாக சக மனிதரை மதிப்போம். மற்றவர்களுடைய உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுப்போம். ஒட்டுமொத்தத்தில் மனித உறவு அற்புதமாக இருக்கும்". இந்த உறவின் முக்கியத்தை, கொரோனா தொற்றின்போது இருந்த ஊரடங்கு எமக்கு உணர்த்தியிருக்கின்றது. அந்தவகையில் எம் விசுவாசம் எம் வாழ்வுக்கு அர்த்தம் கொடுக்கின்றது.

எம் வாழ்வின் மகத்துவத்தை நன்றாக உணர்த்துகின்றது. எனவே இந்த விசுவாசம் ஒரு பொருள் அல்ல அல்லது நாம் கேட்டவுடன் கிடைக்கச்செய்யும் இயந்திரம் அல்ல. மாறாக இறைவனால் எமக்கு கொடுக்கப்பட்ட ஒரு கொடை. எம் கடவுளை அறிந்துகொள்ள அவரால் அருளப்பட்ட ஒரு அருளாகும்.

"ஏன் கடவுளை விசுவசிப்பவர்கள் எல்லாரும் நீதிமான்களாகத்தானே இருக்கினம், அவைவின்ர வாழ்க்கையை விட கடவுளை நம்பாத என்னுடைய வாழ்க்கை எவ்வளவோ நல்லம்" என்று எண்ணி கடவுளை ஏற்க மறுத்தால் அது எமது அலட்சியப்போக்கு. ஏன் என்றால் நம்பிக்கை வைப்பவர்கள் எல்லோரும் மனிதர்கள். அவர்கள் தவறு செய்யக்கூடியவர்கள். ஆனால் அந்தத் தவறுகளையெல்லாம் திருத்தி வாழுவதற்கான சக்தியையும் கடவுள்தானே தரவேண்டும் என்று நாம் அவரிடம் முழுமையாகச் சரணடைய வேண்டும். எனவே இங்கு விசுவாசம் என்று சொல்லும்போது ஒரு புதுமையைக் கண்டவுடன் கடவுளை விசுவசிக்கும் ஒரு உணர்ச்சி சம்மந்தப்பட்டது அல்ல மாறாக அறிவியல் ரீதியானதும், எம் முழு சுதந்திரத்துடனும் முழு அறிவோடும் நாம் எடுக்கும் ஒரு தீர்மானமாகும்.

இந்த விசுவாசம் மனித வாழ்வுக்கு அர்த்தத்தைக் கொடுப்பது மட்டுமல்ல மாறாக எதிர்நோக்கையும் எமக்குத் தருகிறது. இவ்வுலக வாழ்க்கை மட்டுமல்ல மறுவுலக வாழ்வு பற்றிய எதிர்நோக்கைத் தருகின்றது. கத்தோலிக்க மக்களாக நாம் அறிக்கையிடும் நம் நம்பிக்கை அறிக்கையினுடைய பொருளை நன்றாக அறிந்து நாம் சொல்லும்போது எம் விசுவாசம் எம் மனித வாழ்வோடு எவ்வாறாக பின்னிப் பிணைந்து வாழ்வின் அர்த்தத்தைக் கொடுக்கின்றது என்று ஆழமாக அறிய முடியும். எனவே எம் விசுவாசம் ஒரு பரம இரகசியம் என்று சொல்லியோ, வாழ்வுக்கு அப்பாற்பட்ட ஒரு விடயம் என்றோ நாம் நினைத்தால் அது எமது அறியாமையின் வெளிப்பாடு எமது மூடத்தனம். கடவுளில் நம்பிக்கை கொள்வது ஏளனத்துக்குரியது என்று நினைத்தால் நாமும் அவமானத்துக்கு உள்ளாகுவோம்.

# தற்கொலை

## முன்னுரை

தற்கொலையைப் பற்றிஎழுதுவது மிகக் கடினம். பல்வேறு காரணங்களைக் காட்டி இவைதான் தற்கொலைக்கு காரணங்கள் என்று இலகுவாகச் சொல்லி விடலாம். சிலர் தங்கள் தற்கொலைக்கு தாங்களே பொறுப்பு என்று மடல் எழுதி வைத்துவிட்டுத் தற்கொலை செய்கிறார்கள். அதாவது, வேறு யாரையும் காரணங்காட்டி அவர்களை எக்காரணம் கொண்டும் கைது செய்யவோ அன்றேல் அவர்கள் மேல் குற்றச் சுமையை சுமத்த வேண்டாமென்று மற்றவர்களைப் பாதுகாப்பதற்காக அங்ஙனம் எழுதினார்களா? அவ்வாறெனில், தற்கொலை செய்யு முன்னரே மற்றவர்களைப் பாதுகாக்கும் எண்ணத்துடன் தற்கொலை செய்கிறார்களே! இவ்வளவு நல்லெண்ணங்கொண்டோர் ஏன் தற்கொலை செய்கிறார்கள்? தற்கொலையைப் பற்றி எழுதுவது கடினம் என்பதற்கு இது ஒரு நல்ல சான்று.

## தற்கொலை செய்வோர் யார்?

**பல தரப்பட்ட மக்கள் தற்கொலை செய்கிறார்கள்.**

1. பொல்லாத தனிமையுணர்வில் மன அழுத்தம் கொண்டோர் சிலர் தற்கொலை செய்கிறார்கள். இன்னொரு வழியில்லை, நம்பிக்கை இல்லை, மன அழுத்தத்தின் நோவில் தற்கொலை செய்கிறார்கள். வேறு வழி இல்லை என்று எண்ணுவோர், தற்கொலையை ஒரு வழியாகப் பார்க்கிறார்கள்.
2. இழப்புகளால் அன்றேல் இழப்பேனோ என்ற பயத்தினால் தற்கொலை செய்வோர் சிலர். இதிலும் பல வகையுண்டு. காதலித்து அந்தக் காதலில் தோல்வி கண்டோர் தற்கொலை செய்வதுண்டு. வாழ்வாதார உழைப்பை இழந்ததினால் தற்கொலை செய்வோர் பலர். வறட்சியான காலத்தில் தோட்டம் அல்லது வயல் செய்வோர் அனைத்து வாழ்வாதாரத்தையும் இழந்து, நிவாரணமும் பெற முடியாது தவிக்கும் பொழுது, வேறு வழியேதும் தெரியாத பொழுது தற்கொலை செய்ததுண்டு.
3. கடன் தலைக்குமேல் சென்று கடன் கொடுத்தோரின் தொல்லைகளையும் உறுத்தல்களையும் மேலும் சகிக்க முடியாத நிலையில் தற்கொலை செய்தோர் சிலர்.
4. கற்பழிக்கப்பட்டதினாலோ, வன்புணர்வு கொண்டதினாலோ, இனி சமுதாயத்தின் கண்களில் தன்னைக் காட்டிக் கொள்ள முடியாத காரணத்தினால் தற்கொலை செய்தோர் பலர்.
5. நன்றாகக் கல்விகற்று, பரீட்சையிலும் நன்கே செய்து ஒன்பது A கிடைக்கும் என்ற கனவில் காலத்தை ஓட்டிக் கொண்டிருந்த மாணவன், மாணவி ஒன்பது A கிடைக்காத தோல்வியில், கனவு சிதறியதில், சக மாணவர்களை, மாணவியரை சந்திக்க முடியாமல், பாடசாலை ஆசிரிய, அசிரியர்களைக் காண விரும்பாது, பெற்றோரின் ஏமாற்றத்தை சகிக்க முடியாமல் தற்கொலை செய்யும் மாணவ, மாணவிகள் வட மாகாணத்தில் அண்மைக் காலத்தில் பெருகி வருவதை வேதனையுடன் பார்க்கின்றோம்.
6. கணவன் அடித்த காரணத்தினால் கயிற்றில் தொங்கிய மனைவியரும் உண்டு.
7. பெற்றோரின் இடைவிடாத சண்டையினாலும் அவர்களது உச்சக்கட்ட பேச்சுத் தொனியையும் ஏற்றுக் கொள்ள முடியாது ஓடிச் சென்று தன்னைத் தானே மாய்த்துக் கொண்ட சிறுவர்களின் பரிதாப சாவைப் பார்த்து துன்பப்பட்டோர் பலர்.

இவ்வாறாக பலதரப்பட்ட தற்கொலைகளைப்பற்றி நாம் அறிந்துள்ளோம். இன்னும் பல வகைகள் உண்டு.

## திட்டமிடப்பட்டவையா?

பொதுவாக தற்கொலைகள் திட்டமிடப்பட்டு செய்யப்படுவன அல்ல. ஆயினும், இன்னாள் தற்கொலை செய்யலாம் என்ற சில அறிகுறிகள் தோன்றலாம். இவற்றைப் பார்த்தும் வார்க்காமல் இருப்போர் மனிதர்கள் அல்ல.

## சில அறிகுறிகள்

தங்களைத் தாங்களே தனிமைப் படுத்திக் கொள்வார்கள். (கொறோனாவின் தனிமைப்படுத்தல் அல்ல). ஒருவரோடும் எந்த உரையாடலையும், உறவுகளையும் வைத்திருக்கமாட்டார்கள். எங்கோ எதையோ பார்ப்பது போல ஒரு சோக முகத்துடன் காட்சி தருவார்கள். எதிலும் ஒரு பிடிப்பற்ற தன்மை. எதையே இழந்துவிட்ட ஒரு தோற்றம்.

பெரும்பான்மையான தற்கொலைகள், (விசேடமாக உளவள நோய்களுக்கு உட்பாடாதவர்கள்) திடீரெனத் தோன்றும் உணர்வுகளால் மேற்கொள்ளப்பட்டு, செய்வதறியாது ஓர் அவசர முடிவை எடுப்பவர்களாகவே இருக்கிறார்கள்.

இவர்கள் எழுதிவைத்த காரணங்களோ அன்றேல் சமூகத்தில் பேசப்படும் காரணங்களோ மேலெழுந்த வாரியான காரணங்களே. ஒருசில உதாரணங்களைப் பார்ப்போம்.

## உதாரணம் ஒன்று ஒன்பது ‘A’

ஒன்பது A கிடைக்கும் என்ற கனவில், நினைவில் மிதந்து வந்த மாணவன், மாணவி எட்டு A மட்டுமே கிடைத்ததால் தற்கொலை. இதைக் கட்டமைத்து பெரிதுபடுத்தும் ஊடகத்தினர் ஒரு புறம். இந்த மாணவ மாணவியரின் பின்புலத்தில் தற்கொலைகளுக்குப் பல காரணங்கள் உண்டு.

இன்று இந்த நாட்டில், அதுவும் குறிப்பாக வட பகுதியில் பரீட்சைப் பெறுபேறுகளில் பெரும்போட்டி தோன்றியுள்ளது. இந்தப் போட்டியை வளர்ப்பவர்கள் பாடசாலை / கல்லூரி ஆசிரிய ஆசிரியைகள், முதல்வர்கள், பெற்றோர்கள் இந்த வரிசையில் இணைக்கப்படவேண்டியவர்கள். ரியூசன் நிலையங்களும் இந்த வரிசையில் சேர்க்கப்பட வேண்டியவர்கள். இந்தப் பாடசாலை / கல்லூரி முதல்வர்களுக்கும், ஆசிரிய ஆசிரியைகளுக்கும் மாணவ /மாணவியர் முக்கியம் அல்ல. தங்கள் கல்லூரியின் பெயர் தான் முக்கியம். குளத்தடிப் பாடசாலையில் 30 மாணவர்களுக்கு 9A என்றால் பனைமரத்தடிப் பாடசாலையில் மூன்று மாணவர்களுக்கு 9A மட்டுமே. இதைப் பெரிதுபடுத்தி எழுதும் ஊடகங்களும் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுகிறார்கள். மேல் நாடுகளில் இப்படிப்பட்ட பழக்கம் கிடையாது.

நிறைய 9A எடுத்த மாணவ, மாணவியரின் நிழற்படத்துடன் பாடசாலையின் முன் - தெருவால் போவோர் வருவோர் பார்க்கும் படி பெரிய விளம்பரப் படங்கள். இப்படிப்பட்ட பாடசாலைகளில் தங்கள் பிள்ளைகளை இணைத்துக் கொள்ள பெற்றோர் பெருங்கூட்டம். அதற்குள் கைமாறும் பணம் வேறு. இதற்குப் பெயர் நன்கொடை. உண்மையில் அது, இலஞ்சம். இப்படிப்பட்ட பாடசாலைகளில் கல்வி பரீட்சைப் பெறுபேறுகளை நோக்கியே கற்பிக்கப்படுகின்றதே ஒழிய மாணவ, மாணவியரை நல்ல மனிதர்களாக, ஒழுக்க சீலர்களாக, தங்கள் கால்களில் ஊன்றி பக்குவப்பட்ட மனிதர்களாக உருவாக்குவதில் எந்தக் கவனமும் செலுத்தப்படுவதில்லை. பெற்றோருக்கு இந்த அக்கறை இல்லை. ஆசிரிய, ஆசிரியைக்கும் இந்த அக்கறை இல்லை.

ஓர் ஆளுமையை வளர்க்காத பாடசாலை/கல்லூரி எதற்காக? இந்த ஆளுமையை இழந்த மாணவ/மாணவியர்கள், வேரூன்றி வளராத மாணவ / மாணவியர் சிறிய தோல்வியை கண்டதும் துவண்டு போகிறார்கள். உடனே தற்கொலை. பொறுப்பேற்க வேண்டியவர்கள்: பெற்றோர், பாடசாலைகள், ஆசிரிய/ஆசிரியைகள், கல்லூரி முதல்வர்கள், ஊடகங்கள் மாறுவர்களா?

## இன்னோர் உதாரணம்

கணவன் மனைவிக்கு அடித்ததால், மனைவி தூக்குக் கயிற்றில். இது, ஊட கத்தலையங்கம். ஒரு நாள் காலை எழுந்ததும், கணவன் மனைவிக்கு அடித்தானா? (மன்னிக்கவும். அடித்தார் என்று எழுத மனம் வரவில்லை) இப்படியான காட்சிகள் தமிழ்த் திரைப்படங்களில் வடிவேலு செய்வதுண்டு. அது, வாழ்க்கை அல்ல. தூக்குக் கயிற்றில் தொங்கு முன்னர் பல் வேறு பிரச்சினைகள் கணவன் - மனைவியிடையே நடந்திருக்க வாய்ப்புண்டு. பணப்பிரச்சினை, சீதனப்பிரச்சினை. மாமன்மாமியார் பிரிச்சினை, கணவன் - மனைவி தங்கள் வாழ்க்கையைப் பற்றி ஒருவரோடு ஒருவர் பகிராமை, உணர்வுகளை எடுத்துரையாமை, கணவனை விட மனைவி கல்வித் தகைமையில் வளர்ந்திருப்பது, அன்பில்லாமல் காமத்துக்கு மட்டுமே முதன்மை கொடுப்பது, பாலுறவில் வன்மை, என்று பட்டியல் வளரும். இவ்வளவு பிரச்சினைகள் நாளாந்தம் நடந்தும் இவர்கள் உத வியை நாடாமை, அந்தக் கசப்பான உணர்வுகளை அடக்கி வந்தமை, இல்லற வாழ்வில் அர்த்தம் காணாமை. இவை அனைத்தும் ஒன்று சேர்ந்து மனத்தை அழுத்தும் பொழுது மனைவிக்கு தோன்றும் ஒரே வழி -தற்கொலை



**கரவையூர் செல்வம்**

## தன்னம்பிக்கை

தன் நம்பிக்கையில் இவர்கள் வளரவில்லை, வளர்க்கப்படவில்லை. புறத்தையே நம்பி வாழ்ந்தார்கள். தமக்கென்ற ஓர் ஆளுமையை இவர்கள் வளர்க்கவில்லை. தமக்கென்று ஓர் அடையாளத்தை இவர்கள் வளர்க்கவில்லை. இவர்களுடைய அடையாளம் முழுது முழுதாகப் புறத்திலேயே அமைந்தன. அந்தப் புறத்தில் உள்ளவை திடீரென இல்லாமல் போகும் பொழுது, இவர்கள் வாழ்க்கையில் ஒரு வெறுமையையே அனுபவிப்பார்கள். அந்த வெறுமையைத் தாங்க முடியாமல், தப்பிச் செல்ல வழி - தற்கொலை.

## தற்கொலை ஒரு வன்செயல்

தற்கொலை வன்செயல். கொலை செய்வது எவ்வளவு வன்மையானதோ, அதே போன்று தற்கொலையும் ஒரு வன்செயல்தான்.

எனது வாழ்க்கை எனக்கு மட்டும் உரியதல்ல. இந்தப் பேருண்மையை பலர் உணர்வதில்லை. கல்லூரிகளோ, மதங்களோ இந்த உண்மையை மக்களுக்கு உணர்த்தவில்லை.

பரிணாம வளர்ச்சியில் அல்லது படிமுறையில் (Process) அறிவுடன் தோன்றிய மனித இனம் இந்தப் பிரபஞ்சத்தின் (Universe) ஒரு பகுதி. அந்த ஒற்றுமையில் (Unitiveness) இருந்து என்னை வேறுபடுத்திப் பார்க்கும் பொழுது, இந்த வேற்றுமையில் தோன்றுவது இருமைவாதம் (Dualism) இந்த வேறுபடுத்தலில் இருந்து உருவாகுவதுதான் வன்செயல். நான் மற்றவர்களிடமிருந்து என்னை நானே வேறுபடுத்திப் பார்க்கும் பொழுது, தனித்து விட்டேன் என்ற உணர்வு மேலோங்கும். இந்த உணர்வை கையாள முடியாத நம்பிக்கையற்ற தன்மையில் தோன்றும் ஒரே வழி - தூக்குக் கயிறு.

## பிரபஞ்சத்தின் ஒரு பகுதி

நான் இந்தப் பிரபஞ்சத்தின் ஒரு பகுதி : மனித இனத்தின் ஒரு பகுதி. இவற்றில் இருந்து, அதாவது அந்த முழுமையில் (WHOLENESS) இருந்து என்னை வேறுபடுத்திப் பார்க்கக் கூடாது. அது விஞ்ஞானமும் அல்ல : ஆன்மீகமும் அல்ல. இந்தப் பேருண்மையை பரீட்சைப் பெறு பேறுகளை மட்டுமே மையமாக்கி செயற்படும் பாடசாலைகள் / கல்லூரிகள்/ பல்கலைக்கழகங்கள் தவறிவிடுகின்றனர். “பானையில் இருந்தால் தானே அகப்பையில் வரும்?”

அதேபோன்று வெறும் புற ஆராதனைகளையும், அர்த்தமற்ற சடங்குகளையும் மையமாகக் கொண்டு மதத்தையே வளர்க்கும் மதங்கள் ஓர் உலகளாவிய ஆன்மீகம் ஒன்று உண்டு, அந்த ஆன்மீகத்தை நோக்கிப் பயணிப்பதே உண்மையான மதத்தின் நோக்கம் என்று கற்றுக் கொடுக்காத மதங்கள் விமர்சனத்துக்கு உள்ளாக்கப்படுத்தல் வேண்டும். தன் நம்பிக்கையும், இறை நம்பிக்கையும் ஒன்றாகவே வளர்க்கப்பட வேண்டும். இந்த நம்பிக்கை வேரூன்றாது போனால், பிரச்சினைகள் ஒன்றன்பின் ஒன்றாக வரும் பொழுது ‘கடவுள்’ என்ற எண்ணமே வராது.

“பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களேஎல்லாரும்என்னிடம்வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறு தருவேன்” என்று இயேசு என்ற பெரும் ஞானி அனைத்து மக்களுக்கும் அழைப்பு விடுத்தார். “இளைப்பாறு” என்ற சொல் ஆங்கிலத்தில் “Rest” என்ற சொல்லின் மொழிபெயர்ப்பு. இந்த “Rest” என்ற சொல்லின் விளக்கம்: உங்கள் சுமைகளில் இருந்து உங்களை நீங்களே விடுதலையாக்கி கொள்ள வழி காண்பீர்கள்! கிறிஸ்துவை அகத்தில் சந்தித்தால் (Encounter) நீங்கள் அனைத்து சுமைகளிலும் இருந்து விடுதலை பெறுவீர்கள். இந்த இயேசுவிடம் அழைப்பு அனைத்து மக்களுக்கும் விடுக்கப்பட்ட அழைப்பு என்பது “எல்லாரும்” என்ற சொல்லில் தெளிவாக்கப் பட்டுள்ளது.

## எம்முள் ஒரு சக்தி

“மனிதன் மிருகமாகலாம், தெய்வம் ஆகலாம்” என்றோர் பழைய பாட்டொன்று உண்டு. அந்த தெய்வீக சக்தி எம்முள் உள்ளது. கட + உள் = அனைத்தையும் கடந்து, அனைத்துக்குள்ளும் இருக்கும் ஒரு சக்தி. இந்த சக்தியை உணர்ந்து, கொஞ்சமாவது அனுபவத்தால் அந்த சக்தியில் இருந்து ஒரு நம்பிக்கை தோன்றும். இப்படிப்பட்ட ஒரு சக்தியில் நான் வேரூன்றி வளருவேயானால், பிரச்சினைகள் மலைபோல் வந்தாலும், பாறைகள் போன்று தோன்றினாலும், அவற்றிற்கு முகம் கொடுக்க எம்மால் முடியும். தற்கொலைக்கு மாற்று வழிகள் உண்டென்ற உணர்வும், அறிவும், நம்பிக்கையும் தோன்றும். இதை வளர்க்க வேண்டியவர்கள் பெற்றோர், மத குருக்கள், துறவிகள், பாடசாலை ஆசிரிய ஆசிரியைகள். ஆனால் “பானையில் இருந்தால் தானே அகப்பையில் வரும்?”

**கட்டுரை ஆசிரியரின் குறிப்பு :**

“ தற்கொலை” என்ற பெருந்தலைப்பிற்கு இக்கட்டுரை நிறைவளிக்காது. தொடர் கட்டுரைகளாக பல ஆய்வுகளின் முடிவுகளையும் உள்ளடக்கியதாக அமைய வேண்டும்.

## "ஆன்மீகத் திருவிருந்து" - அருட்பணி லொம்பார்தி கட்டுரை

ஆன்மீக வழியில் திருவிருந்தில் பங்கு கொள்வது, நேரடியாக, திருப்பலியில் கலந்து கொண்டு திருவிருந்தில் பங்கேற்பதற்கு இணையல்ல என்றாலும், தொற்றுக் கிருமியின் தாக்கத்தால் நிலவும் கட்டுப்பாடுகள் காலத்தில், இயேசுவோடு நம்மை இணைப்பதற்கு இது சிறந்த வழி என்று இயேசு சபை அருள்பணியாளர் பெத ரிக்கோ லொம்பார்தி அவர்கள் ஒரு கட்டுரையில் கூறியுள்ளார்.

"நெருக்கடி நிலையின் நாளேடு" (Diary of the crisis) என்ற தொடரை, வத்திக் கான் செய்தித்துறையுடன் பகிர்ந்துகொண்டு வரும் அருட்பணி லொம்பார்தி அவர்கள், இத்தொடரின் முதல் பதிவாக, "நிறைந்து வழியும் சதுக்கமும், காலியான சதுக்கமும்" என்ற தலைப்பில் தன் சிந்தனைகளைப் பகிர்ந்ததையடுத்து, "ஆன்மீகத் திருவிருந்து" என்ற தலைப்பில் தன் இரண்டாவது கட்டுரையை வெளி யிட்டுள்ளார்.

ஒவ்வொரு நாளும் திருத்தந்தையும், இன்னும் பல ஆயர்களும், அருட்பணியா ளர்களும், தொலைக்காட்சி அல்லது, வேறு ஊடகங்கள் வழியே திருப்பலி நிறை வேற்றுவதைக் காணும் மக்கள், இத்திருப்பலிகளில், ஆன்மீக வழியில் திருவிருந் தில் பங்கேற்கும் அனுபவத்தைப் பெற்று வருகிறார்கள் என்று கூறும் அருட்பணி லொம்பார்தி அவர்கள், இந்தப் பங்கேற்பு, இயேசுவுடன் நாள் முழுவதும் கொள்ளும் உறவுக்கு அடித்தளமாக அமைகிறது என்று தன் கட்டுரையில் கூறியுள்ளார்.

2011ம் ஆண்டு, ஸ்பெயின் நாட்டின் மத்ரீத் நகரில் உலக இளையோர் நாள் நிகழ்வுகள் நடைபெற்ற வேளையில், அங்கு, திடீரென இரவில் பெய்த பெருமழை யில், திடலில் அமைக்கப்பட்டிருந்த கூடாரங்கள் அனைத்தும் வீழ்ந்து, இறுதித் திருப் பலிக்கென தயாராக வைக்கப்பட்டிருந்த ஏறத்தாழ 20 இலட்சம் நற்கருணை அப்பங்கள் மழையில் நனைந்துவிட்டன என்ற நிகழ்வை இக்கட்டுரையில் குறிப்பி ட்டுள்ள அருட்பணி லொம்பார்தி அவர்கள், அடுத்த நாள் நிகழ்ந்த இறுதித் திருப்பலி யில், ஒரு சில பிரதிநிதிகள் மட்டும் நேரடியாக திருவிருந்தில் கலந்துகொண்டனர் என்பதையும், மற்ற ஆயிரக்கணக்கான இளையோர் ஆன்மீக வழியில் திருவிருந் தில் கலந்துகொண்டனர் என்பதையும் கூறியுள்ளார்.

இந்நிகழ்வால், பலர், துவக்கத்தில், மனமுடைந்து போயினர் எனினும், சரியான விளக்கங்கள் கூறப்பட்டு, நாளடைவில் மக்கள் இந்த முடிவை ஏற்றுக்கொண்டனர் என்பதை, அருட்பணி லொம்பார்தி அவர்கள் இக்கட்டுரையில் குறிப்பிட்டு, தற்போது நிலவும் இன்றைய சூழலையும் மக்கள் மெல்ல, மெல்ல ஏற்றுக்கொண்டு வரு கின்றனர் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

திருவிருந்திற்கென உண்ணா நோன்பு இருந்து திருவிருந்தில் பங்கேற்ற பலர், தற்போது, திருவிருந்து என்ற விண்ணக உணவே இன்றி நோன்பு இருப்பதைத் தன் கட்டுரையில் எடுத்துரைக்கும் அருட்பணி லொம்பார்தி அவர்கள், நல்லதொரு கருத்து க்காக மேற்கொள்ளப்படும் எந்த ஒரு நோன்பும் இறைவனுக்கு ஏற்புடையது என்பதை குறிப்பிட்டுள்ளார்.

## மே மாதத்தில் திருத்தொண்டர்களுக்காகச் செபித்திடுவோம்
**- திருத்தந்தை**



ஒவ்வொரு மாதமும், ஒரு குறிப்பிட்ட செபக்கருத்தை வெளியிட்டு, மக்களை இறைவேண்டுதல் செய்ய அழைத்து வரும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இந்த மே மாதத்தின் சிறப்புச் செபக்கருத்தாக, திருத்தொண்டர்க ளுக்காக செபிக்கும்படி விண்ணப்பித்துள்ளார்.

நிரந்தர திருத்தொண்டர்களாகப் பணியாற்றுவோருக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் செபிக்கும்படி கூறியுள்ள திருத்தந்தை, இறைவார்த்தைக்கும், வறியோருக்கும் பிரமாணிக்கமாகப் பணியாற்ற அழைப்புப் பெற்றுள்ள திருத்தொண்டர்கள், திரு அவையின் சக்திமிகுந்த அடையாளங்களாக விளங்குமாறு செபிப்போமாக என்று அழைப்பு விடுத்துள்ளார்.

திருத்தொண்டர்கள், இரண்டாம் நிலை அருட்பணியாளர்கள் அல்ல, அவர்கள் அருட்பணித்துவக் குழுவில் இணைந்தவர்கள், அதேவேளையில், தங்கள் குடும்பத்தி னருடன் இணைந்து, தங்கள் இறையழைத்தலை வாழ்பவர்கள் என்று கூறியுள்ள திருத்தந்தை, திருஅவையின் பணிகளுக்கு, இவர்களே காவலர்களாக விளங்குகி ன்றனர் என்று எடுத்துரைத்துள்ளார்.

## ஒன்றிப்பு மற்றும் இணக்க உணர்வுடன் செயற்பட திருத்தந்தை அழைப்பு

EU எனும் ஐரோப்பிய ஒன்றியம் ஆரம்பிக்கப்படக் காரணமாக இருந்த மதிப்பீடுக ளுக்கு ஊக்கமளித்து வளர்ப்பதுடன், கோவிட்-19 தொற்றுநோயின் விளைவுகளை ஒன்றி ணைந்து சமாளிக்க ஐரோப்பிய நாடுகள் முன்வரவேண்டும் என அழைப்பு விடுத்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.

இரண்டாம் உலகப்போருக்குப்பின் ஐரோப்பிய நாடுகளிடையே ஒப்புரவை ஊக்கு வித்து, ஒன்றிப்புக்கு வழிவகுத்த, 1950ம் ஆண்டு மே மாத 9ம் தேதியின் Schuman ஒப்பந்தம் உருவாக்கப்பட்டதன் 70ம் ஆண்டு சிறப்பிக்கப்படுவதைப்பற்றிக் குறிப்பிட்ட திருத்தந்தை, இந்த அறிக்கையின் பயனாக விளைந்த நிலையான தன்மையையும், அமைதியையும் நாம் இன்று அனுபவித்து வருகின்றோம் என்று கூறினார். ஐரோப்பிய ஒன்றிய அவையில் பொறுப்பிலுள்ளோர், இவ்வவையின் வரலாற்று ஏடுகளால் தூண்டப்பட்டவர்களாக, இன்றைய தொற்றுநோய்ச் சூழலில், ஒன்றிப்பு மற்றும் இணக்க உணர்வுடன் செயற்படவேண்டும் என அழைப்பு விடுத்தார், திருத் தந்தை பிரான்சிஸ்.

இரண்டாம் உலகப்போர் முடிவடைந்து ஐந்து ஆண்டுகள் கடந்த பின்னரும் வளர்ச்சிப் பாதையில் முன்னேற இயலாமல் திணறிக்கொண்டிருந்த ஐரோப்பாவிற்கு, பிரான்ஸ் வெளியுறவு அமைச்சர் Robert Schuman அவர்கள் முன்வைத்த பரிந்துரைகளின் வெற்றியே, ஐரோப்பிய ஒன்றியம் உருவாக்கப்பட வழிவகுத்தது என்பதையும் திருத்தந்தை சுட்டிக்காட்டினார்.

## விசுவாசிகளின்றி போர்த்துக்கல் பாத்திமா அன்னை விழா



விசுவாசிகளின்றி போர்த்துக்கல் பாத்திமா அன்னை விழா பாத்தி மாவில் மே 13ம் தேதி சிறப்பிக்கப்படும் அன்னை மரியா விழாத் திருவழிபாடு களை, வானொலி, தொலைக்காட்சி மற்றும், டிஜிட்டல் ஊடகங்கள் வழியாக, விசுவாசிகள், பங்குபற்றி, அன்னையின் ஆசீரைப் பெறுமாறு அழைப்பு .

கொரோனா தொற்றுக்கிருமி பரவல் காரணமாக கடைப்பிடிக்கப்பட்டுவரும் ஊரடங்கால், போர்த்துக்கல் நாட்டு பாத்திமா அன்னை விழா, விசுவாசிகள் மற்றும், திருப்பயணிகளின் பங்கேற்பின்றி நடைபெறும் என்று, அந்நாட்டுக் கர்தினால் ஒருவர் அறிவித்துள்ளார்.

போர்த்துக்கல் ஆயர் பேரவையின் உதவித் தலைவரும், 'லறைமாவட்ட ஆயருமான கர்தினால் António Marto அவர்கள், மே 13, வருகிற புதன்கிழமையன்று சிறப்பிக்கப்படும் பாத்திமா அன்னை விழா பற்றி செய்தியாளர்களிடம் கூறுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

கோவிட்-19 காரணமாக, மக்கள் பெருமளவில் கூடுவது, தடைசெய்யப்பட்டிருக்கும் இக்காலக்கட்டத்தில், இவ்வாண்டு பாத்திமா அன்னை விழாவுக்கென ஏற்கனவே திட்டமிட்டிருந்த 350 திருப்பயணிகள் குழுக்கள் இரத்து செய்துள்ளன மற்றும், இவ்வாண்டில் இத்திருநாள் நிகழ்வுகளில் திருப்பயணிகள் கலந்துகொள்ளமாட்டார்கள் என்று, கர்தினால் António Marto அவர்கள் கூறினார்.

ஒவ்வோர் ஆண்டும் மே 13ம் தேதி முதல், அக்டோபர் 13ம் தேதி,வரை பாத்திமாவில் திருப்பயணிகள் கூட்டம் நிரம்பி வழியும் என்று கூறிய கர்தினால் Marto அவர்கள், இவ்வாண்டு இவ்விழாத் திருவழிபாடுகளை, வானொலி, தொலைக்காட்சி மற்றும், டிஜிட்டல் ஊடகங்கள் வழியாகப் பங்குபற்றி, அன்னையின் ஆசீரைப் பெறுமாறு விசுவாசி களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

போர்த்துக்கல் நாட்டில் மே 30ம் தேதி முதல், விசுவாசிகளின் பங்கேற்புடன் திருப்பலிகள் ஆரம்பமாகும் என்றும், அருங்காட்சியகம், மே மாதம் 19ம் தேதி திறக் கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

1917ம் ஆண்டு மே மாதம் 13ம் தேதி முதல், அக்டோபர் 13ம் தேதி வரை, அன்னை மரியா பாத்திமாவின், மூன்று சிறார்க்கு, ஆறு முறைகள் காட்சியளித்தார்.

## பல உலக நாடுகள் பட்டினியால் மடியப்போகின்றன உலக கரித்தாஸ் நிறுவனம் எச்சரிக்கை

தற்போதைய நெருக்கடி காரணமாக பல ஆசிய, ஆபிரிக்க, மத்திய கிழக்கு, தென் அமெரிக்க நாடுகள் பயங்கரமான ஒரு பட்டினி அவலத்தை எதிர்நோக்கியுள்ளன என்றும், இவற்றை காப்பாற்றுவதற்கு உடனடியாக திட்டங்கள் தேவை என்றும் உலக கரித்தாஸ் நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

உலகின் பல நாடுகளும் தற்போது கொரோனா வைரசிலிருந்து தம்மைக் காப்பதற்கான திட்டங்களையே முன்னெடுக்கின்றனவேயொழிய, இதன் விளைவாக பல நாடுகள் எதிர் கொள்ளப்போகின்ற உணவுப்பஞ்சம் பற்றி கவனம் செலுத்த தவறிவிட்டன என்றும் சுற்றுநிறுவனம் குற்றம் சாட்டியுள்ளது. இதற்குரிய உரிய நடவக்கைகள் எடுக்கப்படா விட்டால் 23 கோடி மக்கள் வரை பட்டினியால் வாடும் அபாயம் இருப்பதாகவும் எச்சரிக் கை விடுக்கப்பட்டுள்ளது.

## உலகில் 25 வீதமான சிறுவர்களுக்கு உளப்பாதிப்பு ஏற்படும் அபாயம் சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் ஆய்வில் அதிர்ச்சித் தகவல்

தற்போதைய உலகின் தொடர்ச்சியான ஊரடங்கு சமூகக் கட்டுப்பாடுகள், பாடசாலை விடுமுறை போன்ற காரணங்களால் மனச்சோர்வு, மன அழுத்தம் ஆகியவற்றால் 25 வீதமான மாணவர்கள் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ளதற்கான அறிகுறிகள் அவதானிக் கப்பட்டுள்ளன என்று சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் மேற்கொண்ட ஒரு ஆய்வு தெரிவிக் கின்றது.

இப்படியான சிறுவர்களில் சடுதியாகத் தற்போது ஏற்பட்டுள்ள இந்த உளவியல் பாதிப்புக் காரணமாக அவர்களுடைய எதிர்காலம் பற்றிய ஒரு அச்சமும் கவலையும் இருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதன் காரணமாக, விரைவில் பாடசாலைகளைத் திறப்பதற்கான முயற்சிகளை மேற் கொள்ள நாடுகள் அக்கறை காட்டவேண்டியதன் அவசியம் உணர்த்தப்பட்டுள்ளது.

## 52வது உலக திருநற்கருணை மாநாடு தள்ளி வைப்பு

2020ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஹங்கேரி நாட்டுத் தலைநகர்,புடாபெஸ்ட்டில் நகரில் நடைபெறவிருந்த 52வது உலக திருநற்கருணை மாநாடு, 2021ம் ஆண்டு செப்டம்பர் மாதத்திற்குத் தள்ளிவைக்கப்பட்டுள்ளது என்று, திருப்பீடத் தகவல் தொடர்ப கத்தின் இயக்குனர் மத்தேயோ புரூனி அவர்கள் அறிவித்தார்.

தற்போதைய கொரோனா பரவல் நிலை, அதன் பின்விளைவுகள், விசுவாசிகளும், திருப்பயணிகளும் பயணம் மேற்கொள்வதற்கும், அந்நிகழ்வில் கூடுவதற்கும் எதிர் கொள்ளும் சிரமங்கள் போன்றவற்றால், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், உலகளாவிய திருநற்கருணை மாநாடுகள் பாப்பிறை குழுவுடன் கலந்தாலோசித்தபின், 52வது உலக திருநற்கருணை மாநாடு நடைபெறும் நாளைத் தள்ளி வைப்பதற்குத் தீர்மானித்துள்ளார் என்றும், புரூனி அவர்களின் அறிக்கை கூறுகிறது.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2020ம் ஆண்டு மே மாதம் 13ம் திகதி மின்னிதழாக வெளியிடப்பட்டது.